
# விளக்கு


ஜனவரி - பெப்ரவரி 2005



"வாண்மை ஓங்க மாநிலம் சிறக்கும்"

விலை 30/=

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகல் – 05 சுடர் – 02

# விளக்கு

"வாண்மை ஓங்க மாநிலம் சிறக்கும்"

## துயர் துடைப்போம்



ஆழிப்பேரலைகளின் சீற்றம் எமது தமிழீழக் கடற்கரையையும், இலங்கையின் தென்கரையோரத்தையும் மட்டுமல்லாது – இந்தியா, இந்தோனேசியா, சுமாத்திராப் பகுதிகளையும் தாக்கி அழித்துள்ளது. தமிழீழத்தில் எமது உறவுகளுட பெருந்தொகையானோர் உயிரிழந்துள்ளனர்.

எண்ணிலடங்காக்கோடி பொருட்சேதம் ஏற்பட்டது. உலகமெங்கும் வாழும் மக்களின் இதயங்களைப் பிழிந்தெடுக்கும் துயர நிகழ்வுடன் கடந்த வருடம் கடந்து போனது.

பேரலைகளின் பிடிக்குள் சிக்குண்டோரின் நெஞ்சை உருக்கும் கண்ணீர்கதைகள், துயர நினைவுகளாய்த் தொடர்கின்றன.

இவற்றைத் தணிப்பதே இன்றைய எமது வேண்டுதலாகும்.

பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் என்று ஆயிரக் கணக்கானோர் ஆழிப் பேரலைக்குள் அகப்பட்டிறந்தனர்.

அவர்களின் ஆதரவில் – அரவணைப்பில் அன்புறவில் வாழ்ந்து அநாதையாய் நிற்கும் எமது உறவுகளுக்கு உதவுவதற்கு முன்வருவோம்.

பள்ளிக்குச் சென்றவர்கள் பலரை நாம் இழந்தோம். அவர்கள் படிப்பதற்குச் சென்று வந்த பள்ளிகளை இங்கு இழந்தோம். இன்று படிக்கத் துடிக்கின்ற பள்ளிச் சிறார்களுக்கு ஒரு பொத்தகமேனும் வாங்கிக் கொடுக்க ஒருதுளி உதவுவதற்குத் துணிவோம்.

ஏன் பிறந்தோம் என்பதை அறியாத நிலையில் ஏன் வாழ்கின்றோம் என்று புரியாத பயணத்தில் எம் உடன் கூடி வாழ்ந்த உறவுகளின் துயரத்தை நீக்கும் பணியில் பங்கு கொள் ஏதலையேனும் எமது வாழ்வின் ஒரு படியாகக் கொள்வோம்.

எதையும் இழக்காமல், எட்ட நின்று வேடிக்கை பார்ப்போராய் இருக்கும் நிலையைத் தவிர்ப்போம்.

எமது வாழ்வில் நாம் பெருமை கொள்வதற்கும் வாழ்ந்தோம் என்ற வண்ணம் சிறப்பதற்கும் இன்றே இன்னலுற்ற எம் உறவுகளின் துயர் துடைப்போம்.

பிறரால் தூண்டப்படும் அவசியம் இல்லாமல் செயற்படுபவர்கள் சாதனையாளர்கள். அவர்களது வேலையை அவ்வப்போது மதிப்பீடு செய்ய வேண்டிய அவசியமில்லை. ஒருவேளை, அவர்கள் தம் செயற்பாட்டின் மூலம் செலவை அதிகப்படுத்தலாம். அதை மட்டும் கவனித்துக் கொண்டிருந்தால் போதும்.

– ஜேம்ஸ் ஸேய்ட்ஸ்.

## உள்ளே....

சிறு கதைகள் – மு.இராசநாயகம்
சொக்கன்

கவிதைகள் – ஞா.இமெல்டா சுபாஜினி
சோதியா – நோர்வே

கட்டுரைகள் – கே.ஞானரெத்தினம்
கதிரேசன் சுவர்ணராஜா
மாவுறையூரான்
திருமதி.இ.ஆனந்தகுமாரசாமி
கலாநிதி.க.கைலாசபதி

வெளியீடு – ஆசிரிய வாண்மை விருத்திக்குழு

இதழாசிரியர் – செ.மகேஷ்

ஆசிரியபீட ஆலோசகர்கள்

அ.பஞ்சலிங்கம்
பா.தனபாலன்
எஸ்.சேதுராஜா
கே.சரவணபவான்
க.கனகசிங்கம்
வே.சிவநேசன்
செ.மகேஷ்

முகவரி – தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை,
யாழ்.வலயக்கல்விப்பணிமனை,
யாழ்ப்பாணம்.

விலை – 30 ரூபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கு சஞ்சிகை நடாத்திய
2004 உலப ஆசிரியர் நாள் சிறுகதைப் போட்டியில்
இரண்டாம் பரிசு பெற்ற சிறுகதை

சிறுகதை

# கருகிய மொட்டு



பாடசாலைக்கு வந்ததும் வரவுப்பதிவேட்டில் ஒப்பத்தை நாட்டிவிட்டு, பேனையை மூடி பொக்கற்றுக்குள் செருகியபடி வகுப்பறையை நோக்கி நடக்கிறேன்.

வகுப்பறையினுள் கால்வைக்கும் போது சோர்வும், ஒருவித ஏமாற்றமும் மனதை ஆக்கிரமித்த படியிருக்கிறது. எதிலும் ஒரு பிடிப்பு - பற்றுதலற்று மனம் குறுகுறுத்தபடியிருக்கின்றது.


மேசையில் கையில் கனத்த பாக்கை வைத்து விட்டு, கதிரையில் அமர்ந்து பார்வைக்கு எட்டியவரை விரியும் வழமையான அமர்க்களக் காட்சிகளை விட்டேந்தியாகப் பார்த்தபடி அமைதியாக இருக்கின்றேன்.

பாடசாலை ஆரம்ப மணி இன்னமும் அடிக்கவில்லை. ஒருசில நிமிடங்கள் உள்ளன. மாணவர்கள் சுதந்திரப்பறவைகளாக அங்கும் இங்கும் ஓடியாடி விளையாடிக்கொண்டிருக்கின்றனர். ஆசிரியர்களும் ஒவ்வொருவராக வந்து தமது அறையுள் முடங்கிப் போகின்றார்கள.. அதிபர் தனது காரியாலயத்தில் இருந்தபடி அன்றைய செய்திப் பத்திரிகையுள் மூழ்கியபடி இருக்கின்றார்.

பாடசாலைக்கு வரும்வேளை, வழியில் கண்ட காட்சிக்குப் பின் மனதில் தொற்றிக் கொண்ட கிளர்ச்சியை என்னால் அடக்க முடியாமல் தவித்தபடி இருக்கின்றேன்.

ஆரம்ப மணியடித்ததும் அங்குமிங்குமாக ஓடியாடிச் சத்தமிட்டுக்கொண்டிருந்த மாணவர்கள் காலைப் பிரார்த்தனைக்கு ஒன்று கூடும் இடத்துக்கு வந்து சேர்கின்றார்கள்.

காலைப் பிரார்த்தனை முடிந்தவுடன், அதிபரின் நிதி வசூலிப்பு பற்றிய அறிவிப்புக்கள் நேற்றும் போல இன்றும் தொடங்குகிறது.



வசதிக்கட்டணம், தொண்டர் ஆசிரியர் பணம், தமிழ்தின விழாப்பணம் என நீண்ட பட்டியலை காதில் வாங்கியபடி மாணவர்கள் வரிசை கட்டித்தத் தம் வகுப்புகளுக்கு விரைந்தபடியிருக்கின்றனர்.

**– மு.இராசநாயகம் –**

நானும் காலைப்பிரார்த்தனை ஒழுங்கைக் கவனித்து விட்டு, வகுப்பறை நோக்கி நடக்கின்றேன்.

அங்குமிங்குமாக ஓடியாடி சத்தமிட்டுக்கொண்டிருந்தவர்கள் என்னைக் கண்டதும் அந்த விநாடியே தமது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பிடங்களுக்கு ஓடி விரைவாகவும் வேகமாகவும் எழுந்து நிற்கின்றனர்.

தம்முள் போட்டி போட்டபடி அந்தச் சிறிசுகளின் முகங்களில் புன்னகைப் பூக்கள் மலர்கின்றன.

"குட் மோணிங் சேர்"

அவர்களது ஒருமித்த குரலின் இங்கிதம் நெஞ்சிற்கு இதமளிக்கின்றது. இளமையும், இனிமையும் பிரவகிக்கும் இனிமையான குரல்கள். கள்ளங்கபடமற்று அன்பை வெளிப்படுத்தும் இதமான குரல்கள், அவர்களின் பார்வையிலிருந்து மீள்கையில் நெஞ்சில் சுகம் நிறைகின்றது.

"குட் மோணிங் பிள்ளைகள்...."

அந்த ஆறாம் வகுப்புக்கு வகுப்பாசிரியராய் இருப்பது ஒரு சுகமான அனுபவந்தான். அத்தனை கண்களும் என் னையே நோக்கிட நான் சொல்லும் ஒவ்வொரு வார்த்தை களையும் வேதவாக்காக்கி ஆர்வத்தோடு செவி மடுக்கும் அந்தச் சின னஞ் சிறிசு களின் கபடமற்ற உள்ளங் களும், சுட்டித்தனங் களும், கண்டிப்புக்கு அடங் கிப்போய்விடும் தன் மையும் அவர்கள் மேல் எனக்கிருக்கும் பிரியத்தை வலுப்படுத்தியது.



தங்கள் வீட்டில் நடந்த சின்னச்சின்ன விடயங்களையும், பாடசாலையில், ஊரில் நடக்கும் சம்பவங்களையும் தமக்குள் முந்திக்கொண்டு தகவல்களாகத் தந்துவிடுவார்கள்.

பாடவேளைக்கு வகுப்புக்கு வராத ஆங்கில ஆசிரியர் பற்றியே, சதாமுறைப்பட்டுக்கொள்வார்கள். அது பற்றி அதிபரிடம் முறையிடப்போய், அவருடன் முரண்பட்டுவிட்டேன். பின்னர்தான் ஆங்கில ஆசிரியர் அதிபருக்கு, பல வழிகளிலும் உதவுகின்ற அவரது ஆள் எனத் தெரிந்துகொண்டேன்.

என் வாழ்வில் எதிர்கொள்கின்ற சோகங்களின் மூட்டம் இந்தச் சிறிசுகளின் தரிசனத்தில் எப்படியோ கரைந்து போய்விடுகின்றன.

ஆனால், இன்று அந்தக் காட்சி தந்த சோகம். என்னை மீளமுடியாத வேதனையில் ஆழ்த்துகின்றது.

கண்கள் முன்வரிசையில் வழமை போலிருக்கும் இங்கிதையைத் தேடுகின்றன. அவளுக்கு நெருக்கமான தோழிகள் ஜனனி, ஜெயசலா, கனிதனா, கீர்த்திகா, கொலிஸ்ரா, தீபனா.... இன்னும் புவிதா, ராஜி எல்லோருமே இருக்கிறார்கள்.

இங்கிதை மட்டும் ஏன்...? இனி வரமாட்டாளா....? எல்லா மாணவர்களையும் முந்திக்கொண்டு காரியமாற்றுபவள் அல்லவா? அவள் கடந்த இரண்டு நாட்களாக வகுப்பில் பிரசன்னமாகாமலிருக்க ஏன் நிர்ப்பந்திக்கப்பட்டாள்...?

மனதில் எழும் கேள்விகளுக்கு விடை தேடமுடியாமல் மனம் தவிக்கின்றது.

அவளில்லாமல் இருப்பது மகத்தான சோகத்தையல்லவா என்னுள் நிறைக்கின்றது. அவள் வகுப்பில் இல்லாத வேளைகளில் அவளின் தனி ஆளுமையின் வீச்சை முழு வகுப்புமே உணரக்கூடியதாக உள்ளது. அது சகமாணவர்களைக் கூட பாதிக்காமல் இருந்ததில்லை. அந்தளவுக்கு அந்த வகுப்பின் உயிர்ப்பில் தன்னை நிதமும் இனங்காட்டியபடி இருப்பவள்.

இப்படியான ஒருத்தியை இழப்ப தென்பது....

அவள் இனிமேல் வரமாட்டாளா....?

வலிகாமத்தில் இராணுவத்தின் உயர்பாதுகாப்பு வலயத்தினுள் வீடு இருந்ததால், இல்லிடம் விட்டுத் துரத் தப்பட்ட பல குடும்பங்களில் இங்கிதையின் குடும்பமும் ஒன்று. இராணுவச் சுற்றிவளைப்பு ஒன்றில் தந்தையைப் பறிகொடுத்துவிட்டு, விதவைத்தாயுடனும், மூன்று சகோதரர்களுடனும் இடம்பெயர்ந்து வந்து இப்பகுதியில் ஒட்டிக்கொண்டிருக்கிறாள்.

*இந்த வயிறென்று ஒன்று உள்ளதே. அது நிதமும் பசி யெடுக்கிறதே, இந்த வயிற்றுப்பசி எத்தனை நிஜ மானது. எத் தனை கொடுமையானது. அந்தப் பிஞ்சு வயிறு அதனைத் தாங்கிக்கொள்ளுமா?*

குடும்பத்தில் மூத்த வள். குச்சி போன்ற பலமற்ற உடல்வாகு. பரந்த நெற்றியின் மேல் அலையும் குட்டையான கேசம். அவளின் தோற்றத்துக்கு இசைவான பொது நிறம். பெரிய கருவிழிகள். அவை சதா நாற்புறமும் சுழன்றபடி சூழலைச் சிறைப்பிடிக்கும் தன்னியல்பு கொண்டவை.

பார்த்தவுடன் யாரையும் கவரக்கூடிய ஏதோவொன்று அவளிடம் துருத்திக்கொண்டிருக்கும். இயல்பாகவே படிப்பிலும் கெட்டித் தனமானவள். எதையும் கூர்ந்து அவதானித்து வினாவெழுப்பி விவாதிக்கும் பண்பு அவளுக்குரியது.

படிப்பில் அவளுக்கிருக்கும் ஆர்வத்தைப்பற்றி பல ஆசிரியர்களும் என்னிடம் பிரஸ்தாபித்திருக்கிறார்கள். பாடவேளைகளில் எனது அனுபவத்திலும் கண்டிருக்கிறேன்.

கடந்த வாரத்திலும் ஒருமுறை தமிழ்ப்பாடத்தில் ஒத்தகருத்துச் சொற்கள் பற்றி விளங்க வைத்துக் கொண்டிருக்கையில் அகதி என்பதற்கு இல்லிடம் அற்றவர்கள் எனச் சொல்லநேர்ந்த போது, என்மீது தனது கேள்வியை எழுப்பி சிந்திக்க வைத்திருக்கிறாள்.

கரும்பலகையில் அதை எழுதிவிட்டுத் திரும்புகையில் எழுந்து நின்று என்னை நோக்கிக் கேட்டாள்,

"சேர் ..... எங்களுக்கும் வலிகாமத்தில் வீடு இருக்கு. அப்ப ஏன் சேர் அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் எங்களை அகதிகள், அகதிகள்... என்று கூப்பிடுகினம்"

இதுபோல தனக்கெழும் சந்தேகங்களை அவ்வப்போது விவாதித்து தெளிவுபெறும் ஒருத்தியை வகுப்பில் இழப்பதென்பது மகத்தான சோகமல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavahaham.org



***கல்வியுலகு ஓயாது உரைக்கும் இலவசக்கல்வி, கட்டாயக் கல்வி என்பதன் அர்த்தம்தான் என்ன? நடைமுறை யதார்த்தங்களை எட்டாத கோட்பாடுகளால் யாருக்கு என்ன பயன்.***

சின்னவயதில் பாரப்படுத்தப்பட்டுவிட்ட இந்த அவல வாழ்வினிடையேயும், அவள் அனுபவிக்கும் சந்தோசங் களையும் என்னுடன் பகிர்ந்து கொள்பவளாயிற்றே.

வீட்டில் அவள் நேசிக்கும் நாய் குட்டிபோட்டது முதல், தன் தங்கைகள் தன்மீது காட்டும் ஈடுபாடு, குட்டித்தம்பியின் துடுக்குத்தனம் என சின்னவிடயங் களையெல்லாம் அகமகிழ்ந்து கூறுவாள். அப்போது அவளது சிலிர்ப்பை முகமலர்வில் அவதானித்திருக் கின்றேன்.

இன்னொருமுறை, வகுப்பில் அவளது கைகள் செம்மை பாரித்து வீக்கம் கண்டிருந்ததை ஏதேச்சையா கப் பார்த்து அவளை விசாரித்தேன். தான் கொடுத்த ஒப்படைக்கு புள்ளி போடாததைக் கண்டு நியாயம் கேட்கப் போய் ஆங்கில ஆசிரியரிடம் செம்மையாக அடிவாங்கியதாகக் கூறினாள்.

அப்போது அந்த ஒளிவீசும் கண்களிலும் முற்றிலும் வெளிப்படுத்த இயலாத ஒரு சோகம் தெரிந்தது.

தகப்பனை இழந்துவிட்ட கொடுமையைச் சிறுவய தில் அவள் உணரக்கூடாது என்பதில் கரிசனை கொண்டு வாஞ்சையுடன் பழகி வந்தேன்.

பாடசாலையில் நான் கடைசியாகப் பார்த்த அன்று, வகுப்பில் அவள் மயக்கமடைந்து கீழே விழுந்துவிட்ட தாக அவளது தோழிகள் வந்துகூறினார்கள். ஓடிச் சென்று பார்த்தபோது, அவள் உடல் குளிர்ந்து பல வீனமுற்று வியர்த்தபடி இருந்தது. நன்றாகச் சோர்வுற்றி ருந்தாள். இதற்கு முன்னரும் சில தடவைகள் இவ்வாறு நிகழ்ந்துள்ளது.

காலையில் வயிற்றுக்கு ஆகாரம் இல்லாதுவிட்ட நாட்களில் இப்படியெல்லாம் அவளுக்கு நேர்ந்து விடுகிறது.

இந்த வயிறென்று ஒன்று உள்ளதே. அது நிதமும் பசியெடுக்கிறதே, இந்த வயிற்றுப்பசி எத்தனை நிஜ மானது. எத்தனை கொடுமையானது. அந்தப் பிஞ்சு வயிறு அதனைத் தாங்கிக்கொள்ளுமா?

அவளை நினைத்தபோது, நான் காலையில் பார்த்தது அவளைப் பொறுத்தவரை நியாயமான முடிவு தானே என மனம் எண்ணிக்கொள்கிறது.

அன்று மயக்கம் தெளிந்த நிலையில், அவளிடம், "இங்கிதை காலையில் சாப்பிடாமலா வந்தனீர்" எனக்கேட்டபோது,

"இல்லை சேர்.... சாப்பிட்டனான்...."

"என்ன சாப்பிட்டனீர்....."

"இரவு முழுக்க நித்திரைமுழிச்சு அம்மாவுக்கு உதவி செய்தனான் சேர்.... அதுதான்..."

தனது இயலாமையை மறைக்கும் பிரயத்தனத்துடன் கண்களில் நீர் திவலையிடக் கூறினாள்.

"இனிமேல் சாப்பிடாமல் பள்ளிக்கு வரக்கூடாது..." என அவளது பின்புலத்தை சற்றும் மனதிற் கொள்ளாது சராசரி ஆசிரியத்தனத்துடன் கூறியது நினைவுக்கு வர குற்ற உணர்வு என்னுள் கிளர்கிறது.

அன்று அவளும் விரக்தி மண்டிய பார்வையை என் மேல் வீசிவிட்டு மௌனமானாள்.

இத்தனைக்கும் வகுப்பில், தான் எப்போதும் மகிழ்ச்சி யாகவும், நிம்மதியாகவும் இருப்பது போலவும், தன்னில் எவரும் பரிவுகாட்டி உதவ முன்வரக்கூடாது என்பதைச் சாதிப்பது போலவும் கலகலப்பாக இருப்பாள்.

கல்வியுலகு ஓயாது உரைக்கும் இலவசக்கல்வி, கட்டாயக் கல்வி என்பதன் அர்த்தம்தான் என்ன? நடைமுறை யதார்த்தங்களை எட்டாத கோட்பாடுக ளால் யாருக்கு என்ன பயன். அவளைப் போல இன் னும் எத்தனை இங்கிதைகளின் ஆளுமைகள் பாழடிக் கப்பட்டு, தெருவில் வீசப்பட்டுக்கொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் எங்கே விடை காண்பது?

இந்தப் பிஞ்சு வயதில் குடும்பத்தின் சுமையை சிலு வையாகத் தோளில் சுமக்கத் துணிந்துவிட்ட அவளின் வைராக்கியத்துக்கு எந்தக்கல்வித் தத்துவத்தில் விடை தேடுவது?அவளது நினைவுத் தடத்திலிருந்து விடு படமுடியாமல் அவளைப் பற்றி வகுப்புத் தோழிகளிடம் கேட்க எனது மனம் நப்பாசை கொள்கிறது.

அவளுக்கு நெருக்கமான தோழி தீபனாவைக் கேட்டேன்.

"இங்கிதை இனிமேல் வரமாட்டாளா....?"

தீபனாவின் முகத்தில் களையில்லை. வாடிப்போயி ருக்கிறது. அவள் தயங்கி நின்ற வேளை, அடுத்த வரிசையில் இருந்து எழுந்து நின்ற மாணவி ஒருத்தி-

"சேர் இங்கிதை இனி வரமாட்டா, சந்தையில தாயோட யாவாரம் செய்யப்போறா..." என்கிறாள்.

பலநூறு சம்மட்டி கொண்டு தாக்கியது போன்ற உணர்வுடன் கலங்கிப்போய் நிற்கிறேன்.

காலையில் நான் கண்ட காட்சி மனத் திரையில் மெல்ல விரிகிறது.

'அந்தச் சந்தையோரமாகச் செல்லும் பாதையின் இடது பக்கமாக ஒரு மர நிழலில் சிதிலமடைந்திருந்த சீமெண்ட் தளத்தில், பொலித்தீன் தாளை விரித்து அதன்மேல் சிறிதும் பெரிதுமாக ஒரு தொகைக் கொய்யா கண்ணாடிச்சாடி நிரம்ப பலவண்ணரொபிகள், பழங்கள் இன்னும் கைமாட்டில் பெட்டியொன்றில் கச் சான்கடலை எனப் பக்குவமாகப் பரப்பிவிட்டபடி, தனது வியாபாரத்தில் கரிசனையாகக் குந்தியிருந்தாள்?

அந்தக் காட்சியிலிருந்து மனம் மீளமுடியாமல் வகுப் பில் பிள்ளைகளைப் பார்த்த போது, நெஞ்சு கனத்து விழிகளில் ஈரம் கசிகிறது.

❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவக சிறார்களின் கல்வி நிலை எதிர்நோக்கும் பிரச்சினைகள்

கட்டுரை

தீவகப் பிரதேசமானது 1990 ஆம் ஆண்டிற்கு முன்னர் மிகவும் செழிப்புமிக்க பிரதேசமாகவும், சிறந்த கல்விமான்களைக்கொண்ட பிரதேசமாகவும் விளங்கியமை யாவரும் அறிந்த விடயமே. அத்தகு சிறப்புப் பெற்ற பிரதேசமானது 1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களின் காரணமாக முழுமையான இடப்பெயர்வுக்கு உள்ளானது. 1996 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீள்குடியேற்றம் படிப்படியாக இடம்பெறத் தொடங்கியது. ஆயினும் தீவகத்தின் மொத்தக்குடித்தொகையில் பத்துச் சதவீதமானவர்களே நிரந்தரமான குடியேற்றத்தில் ஈடுபட்டனர். இவர்கள் அனைவரும் மிகவும் வறிய மக்களாவர். பொருளாதாரபலம் கொண்டவர் எவரும் தீவகத்தில் மீள்குடியேறாமை குறிப்பிடத்தக்க விடயமாகும். ஓரளவு பொருளாதார பலம் கொண்ட வர்கள்கூட தீவக பிரதேசவாதிகள்போல் பதிவுகளை மேற்கொண்ட போதிலும் யாழ்ப்பாண மாநகரத்தையே நிரந்தர வாழ்விடமாகக் கொண்டுள்ளனர். எனவே தற்பொழுது தீவகத்தில் பொருளாதார ரீதியில் பலவீனமான மக்களே வாழ்கின்றனர் என்பதனை உறுதியாகக் கூறமுடியும்.

தீவககல்வி வலயத்தில் எழுபத்தாறு பாடசாலைகள் உள்ள போதிலும் தற்பொழுது 51 பாடசாலைகளே இயங்குகின்றன. அவற்றில் பல பாடசாலை மாணவர்தொகை மிகக் குறைவாகவே காணப்படுவதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## பாடசாலைகள் பற்றிய விபரங்கள்

| கோட்டம் | கோட்டம் | | | கோட்டம் | | | கோட்டம் | | | கோட்டம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத | இ | மு | மொத | இ | மு | மொத | இ | மு | மொத | இ | மு |
| நெடுந்தீவு | 3 | 3 | 0 | 1 | 1 | 0 | 6 | 4 | 2 | 10 | 08 | 02 |
| ஊர்காவற்துறை | 4 | 4 | 0 | 9 | 9 | 0 | 19 | 9 | 10 | 32 | 22 | 10 |
| வேலணை | 3 | 3 | 0 | 12 | 12 | 0 | 19 | 6 | 13 | 34 | 21 | 13 |
| மொத்தம் | 10 | 10 | 0 | 22 | 22 | 0 | 44 | 19 | 25 | 76 | 51 | 25 |

## தீவகத்தில் ஆரம்பக்கல்வி நிலை

தீவக கல்வி வலயத்தில் 47 பாடசாலைகளில் ஆரம்பக்கல்வி கற்பிக்கப்படுகிறது. இதனடிப்படையில் 47x5 என்ற ரீதியில் 235 ஆசிரியர் இருந்தாற்றான் ஒவ்வொரு வகுப்புக்கும் ஓர் ஆசிரியர் வீதம் கற்பித்தலில் ஈடுபடமுடியும். ஆனால் மாணவர் தொகையின் அடிப்படையில் ஆசிரியர் ஒதுக்கீடு (Teacher Cadre) கணிக்கப்படுவதனால் தீவக பாடசாலைகளுக்கான மொத்த ஒதுக்கீடு; பொதுவாக ஆரம்பம் 162 + ஆங்கிலம் 47 என மொத்தம் 209 ஆகும். ஆயினும் தற்பொழுது உள்ள ஆசிரியர் எண்ணிக்கை 107 ஆகும். எனவே 107 ஆசிரியர்கள் 235 வகுப்புக்களில் கற்பிக்க வேண்டிய துர்ப்பாக்கியமானநிலை உள்ளது. அதாவது பலதர கற்பித்தலே இங்கு பின்பற்றப்படுகிறது. குறிப்பாக ஆரம்பக்கல்வி நிலையில் பெரிதும் பாதிக்கப்படுபவை சிறிய பாடசாலைகளே ஆகும். இந்தப் பாடசாலைகளில் மாணவர் தொகை மிகக்குறைவாக இருப்பதே இதற்குக் காரணமாகும்.

## மாணவர் தொகை அடிப்படையில் பாடசாலைகள்

| வகுப்பாயிடை | மாணவர் தொகை |
|---|---|
| 00 - 30 | 04 |
| 31 - 60 | 11 |
| 61 - 90 | 11 |
| 91 - 120 | 10 |
| 121 - 150 | 05 |
| 151 - 180 | 03 |
| 191 - 210 | 03 |

36 பாடசாலைகளில் 120க்கும் குறைவான மாணவர் கல்வி பயில்வது குறிப்பிடத்தக்கது.

## இடைநிலைக்கல்வி நிலை

29 பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11 வரையான வகுப்புக்களில் கற்பித்தல் இடம்பெறுகின்றது. அத்துடன் 03 பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 9 வரை வகுப்புக்கள் உள்ளன. எனவே ஒவ்வொரு வகுப்புக்கும் பிரதான ஐந்து பாடங்களுடன் அழகியல், தொழில்நுட்பம், மார்க்கபோதனை ஆகிய பாடங்களையும் போதிக்கும் திறன் கொண்ட ஆசிரியர்களைக் கொண்டு பாடசாலைகள் அமைவதே புதிய கல்விச் சீர்த்திருத்தத்தின் இலக்காகிய "யாவருக்கும் கல்வியில் சம சந்தர்ப்பத்தை உருவாக்குதல்" என்பதனை உறுதிப்படுத்தும். அதன் பிரகாரம் 32 பாடசாலைகளிலும் கற்பித்தல் இடம்பெறவேண்டுமாயின் 32 x 8 என்ற ரீதியில் 256 ஆசிரியர்கள் தேவை. ஆனால் மாணவர் தொகையின் அடிப்படையிலான ஆசிரியர் ஒதுக்கீடு 247 ஆகும். இதில் இரண்டாம் மொழி கற்பிப்பதற்கான ஒதுக்கீடு 10. எனவே ஏனைய பாடங்களுக்கான ஒதுக்கீடு 237. ஆயினும் 17 ஆசிரியர் மட்டுமே அழகியல் பாடநெறிக்கான ஒதுக்கீடு ஆகும். 32 பாடசாலைகளில் சங்கீதம் / நடனம் / சித்திரம் ஆகிய பாடங்களைப் போதிப்பதற்கு இந்த 17 ஆசிரியர்களையே பயன்படுத்த முடியும் என்பது குறிப்பிடக் கூடிய அம்சமாகும்.

இது இவ்வாறிருக்க தற்பொழுது இடைநிலைப்பிரிவில் கற்பிப்பதற்கான தகுதிகொண்ட 231 ஆசிரியர்கள் உள்ளனர். ஆயினும் முக்கியமான பாடங்களில் சிறப்புத்தேர்ச்சி பெற்றவர்கள் சில பாடங்களுக்கு அருமையாகவே உள்ளனர். குறிப்பாக சமூகக்கல்விப் பாடத்தைக் கற்பிப்பதற்குவேண்டிய அறிவு பெற்றவர்கள் குறைவாகவே உள்ளனர்.

## உயர்நிலைக் கல்வியின் நிலை

உயர்கல்வியைப் பொறுத்தவரையில் தீவக கல்வி வலயத்தில் ஓரளவு திருப்தியான ஆசிரியர் வளம் காணப்படுகிறது. ஆயினும் நெடுந்தீவு கோட்டத்தில் இந்த நிலை எதிர்மாறாக உள்ளது.

10 பாடசாலைகளில் உயர்நிலை வகுப்புக்கள் உள்ளன. அவற்றின் தர அடிப்படையிலான வகைப்படுத்தல் வருமாறு.

உயர்தரத்தில் கலைப்பிரிவு மட்டும் கொண்ட பாடசாலைகள் - 05

கலைப்பிரிவும் வர்த்தகப் பிரிவும் உள்ள பாடசாலைகள் - 02

கலை, வர்த்தக, விஞ்ஞானப் பிரிவுகள் உள்ள பாடசாலைகள் - 03

ஆயினும் உயர்தரத்தில் கல்விபயிலும் மாணவர் தொகை குறைவாக இருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்

## தீவக சிறார்களின் கல்விநிலை தொடர்பாக எதிர்கொள்ளும் பிரச்சினைகள

1. மாணவர் தொகை குறைவாக இருப்பதனால் ஆசிரியர் ஒதுக்கீடு இடம்பெறும்போது குறைவான ஆசிரியர்களையே வழங்கமுடிகிறது. இதனால் பல்தர கற்பித்தல் என்ற பேரில் வகுப்புக்களை இணைத்து கற்பித்தல் மேற்கொள்ளப்படுவதனால் அது உரிய பயனைக் கொடுப்பதில்லை.

2. வறுமைநிலை காரணமாக பிள்ளைகளின் கல்வி மீது அக்கறை கொள்ளாதநிலையை பெற்றோர் கொண்டிருத்தல்.

3. நலன்விரும்பிகள் என்ற பெயரில் சிலர் தமது குறுகிய பிரதேசவாதம், சமயவாதம் என்பவற்றின் பின்னணியில் நின்று பாடசாலைகளை அதிகரித்தலில் கவனம் செலுத்துகின்றனரேதவிர மாணவரின் கல்விமீது அக்கறை செலுத்துவதில்லை. பாரம்பரியம் பேணப்படும் நோக்கில் பாடசாலைகளை மீளத்திறப்பதன் மூலம் மாணவர்தொகைகள் குறைந்துசென்று அந்தப் பாடசாலைக்கான ஆசிரியர்களை வழங்கமுடியாதுள்ளது. உதாரணமாக மண்டைதீவு பிரதேசத்தில் இருக்கும் மொத்த மாணவர்தொகை 148 ஆகும். இந்த மாணவர்கள் இரு பாடசாலைகளில் கல்வி பயிலுகின்றனர். அதேபோல ஒரே எல்லையில் வேலணை சேர்.வை. துரைச்சாமி மத்திய மகாவித்தியாலயம் அமைந்துள்ள போதிலும் வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்தில் தரம் 10 இல் 10 மாணவர்களும் தரம் 11 இல் 22 மாணவர்களும் கல்விபயிலுகின்றனர்.

இதேபோன்று தரம் 10, தரம் 11 ஆகிய வகுப்புக்களில் மிகக் குறைவான மாணவர் தொகையுடன் பாடசாலைகள் இயங்குவதற்கு நலன் விரும்பி களாகச் செயற்படுபவர்களே காரணமாகும்.

## 4. ஆசிரியர்கள், அதிபர் ஆகியோரின் மனோபாவம்

இவர்களில் பெரும்பாலானோர் இந்தப் பிரதேசத்தில் வேலைசெய்வதைத் தொழிலாக நினைக்கிறார்களே தவிர உளத்திருப்தியுடன் ஈடுபடுவதாகக் கருத முடிவதில்லை. பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் உரிய நேரத்தில் செல்வதில்லை. குறிப்பாக புங்குடுதீவு பாடசாலைகளில் அதிபர்கள் நிற்பது அரிதாகவே உள்ளது. கூட்டங்களில் கலந்துகொள்ளுதல், குணநல உள்ளீடு, அது சார்பான பொருள் கொள்வனவு, கட்டடம் தொடர்பான நடவடிக்கைகள் என்பவற்றில் ஈடுபடுதல் என்ற முறையில் வெளியேறுவது சர்வசாதாரணமான நிகழ்வாகும். குறிப்பாகச் சொல்வதாயின் இடமாற்றத்தை விரும்புபவர்களே அதிகமாக உள்ளனர்.

## 5. கற்பித்தல் நேரம் குறுகுதல்

கல்வித்திணைக்களத்தினூடான சேவைக்காலச் செயலமர்வுகள், அரச சார்பான நிறுவனங்களின் விசேட செயலமர்வுகள் என்ற ரீதியில் அதிகமான பாடசாலை நாட்கள் கற்பித்தலில் இருந்து விடுவிக்கப்படுகின்றன. அத்துடன் போட்டிகள், விசேட செயற்திட்டங்கள் என்பவற்றில் கூடிய கற்பித்தல் நேரங்கள் இழக்கப்படுத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும், கற்பித்தலில் நேரக்குறைப்புக்கு வழிசமைக்கிறது.

### 6. பொருத்தமான ஆசிரியர் வளமின்மை

எண்ணிக்கை அளவிலேயே ஆசிரியர் வளம் கணிக்கப்படுகிறது. தேசிய ரீதியில் ஆசிரியர், மாணவர் விகிதாசாரமானது 1:28 ஆக உள்ளது. தீவகப் பிர தேசத்தில் இந்த விகிதாசாரமானது 1:22 ஆகும். சில பாடசாலைகளில் இந்த விகிதாசாரம் 1:30 க்குமேல் காணப்படும். அதேவேளை சில பாடசாலைகளில் 1:10 க்கும் குறைவாக உள்ளன.

இது இவ்வாறிருக்க பொருத்தமான துறை சார்ந்த தேர்ச்சியுடைய ஆசிரியர் இன்மை கல்விக்கு ஓர் இடர்பாடாக உள்ளது. ஒரு துறையில் பயிற்சி பெற்று சிறப்புத்தேர்ச்சிபெற்ற ஆசிரியர் வேறொரு பாடத் தைப் போதிக்கும்நிலை காணப்படுகிறது. இந்த நிலை யில் உரிய வினைத்திறனைக் கொடுக்கமுடியாது.

நெடுந்தீவு கோட்டத்தில் மூன்று பாடசாலை களில் உயர்தர வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இந்த மூன்று பாடசாலைகளிலும் பட்டதாரி அல்லாதவர்களே உயர்தர வகுப்புக்களில் கற்பித்தலில் ஈடுபடுகின் றார்கள். இது எவ்வாறு பயன்கொடுக்கும் நிலையாகும்.

### 7. ஆசிரியர் நியமனங்களும் இடமாற்றங்களும்

நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவை தீவு என்பன கடலால் பிரிக்கப்பட்டு, தனிமைப்படுத்தப் பட்ட தீவுகளாகும். இவற்றுடன் புங்குடுதீவு யாழ்.நகரில் இருந்து மிகத்தொலைவில் இருக்கின்றது. (22கிலோ மீற்றர் மேல்) எனவே இந்தப் பிரதேசங்களில் கடமையா ற்றுவதற்கு எவருமே முன்வருவதில்லை. குறிப்பாக தற்பொழுது இடம்பெற்ற கல்வியியற்கல்லூரி நியமனங் கள் இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இவர்களில் எவரும் இந்தப் பிரதேசங்களில் நியமிக்கப்படவில்லை.

யாழ்.வலயம், வலிகாமம் வலயம் ஆகியவற்றில் வெளிமாவட்டசேவை புரியாத ஆசிரியர்கள் பலர் இருப்பினும் அவர்களில் எவரும் தீவகத்தில் பணிபுரிய வருவதற்குத் தயாராக இல்லை. ஆனால் தீவகத்தில் பல வருடங்கள் சேவை புரிந்தவர் ஏனைய வலயங்க ளுக்கு இடமாற்றம் பெறத்துடிக்கிறார்கள். இவர்கள் விடுவிக்கப்படுவது மனிதாபிமான செயற்பாடேயாகும். எனவே உள்வருகை இடம்பெறாமல் வெளியேற்றம் தொடரும்போது அது தீவக பாடசாலைகளில் முழுமை யான செயலிழப்பை ஏற்படுத்தும்.

புதிய கற்பித்தல் துணைச்சாதனங்களாக ஒலி, ஒளிச்சாதனங்கள் தாராளமாகப் பாடசாலைக ளுக்கு வழங்கப்பட்ட போதிலும் அவை உரிய முறை யில் பயன்படுத்தப்படுவதில்லை. மின்சார வசதியின்மை முக்கியமான குறைபாடாகும். அதேவேளை அவற்றைப் பயன்படுத்துவதற்கு ஆசிரியர்கள் தயக்கம் காட்டுவதும், அதிபர்கள் சிலர் பொருள்களைப் பழுதடையாது பேணுவதில் ஆர்வம் காட்டுதலும் காரணங்களாக அமைகின்றன. பல இலத்திரனியல் சாதனங்கள் இன் றும் பாடசாலைகளின் அலுவலங்களில் தூங்குவத னைக் காணலாம்.

### தீர்வுகள் தொடர்பாக எனது அபிப்பிராயங்கள்

1. ஆசிரியர், அதிபர், வலய உத்தியோகத்தர் கள் தொடர்பாக பொதுவான ஓர் இடமாற்றக்கொள்கை நடைமுறைப்படுத்தப்படவேண்டும். ஏனைய திணைக் களங் களில் உள்ளதுபோன்ற ஒழுங்குமுறைப்படுத் தப்பட்ட பாரபட்சமற்ற இடமாற்றக்கொள்கையாக அது அமையவேண்டும். அதனடிப்படையில் தீவகத்தின் ஆசிரியர் வளத்தை உறுதியாகப் பேணமுடியும்.

2. மிகக்குறைவான மாணவர்களைக்கொண்டு இயங்கும் பாடசாலைகள் அயலில் உள்ள பாடசாலை களுடன் இணைக்கப்படவேண்டும். பாடசாலைகளின் எண்ணிக்கையோ, அவற்றின் தரமோ எமக்கு வேண்டிய தல்ல. எமது சிறாரின் கல்வி மேம்பாடே அவசியமான தென்ற கருத்து பெற்றோர் மத்தியில் வலுப்பெற வேண் டும்.

3. போக்குவரத்து வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும். உரிய நேரத்தில் ஆசிரியர்கள் பாடசாலைகளுக்குச் செல்வதற்கு ஏற்றவகையில் போக்குவரத்து சீராக வேண்டும். நீண்ட தூரங்களில் அமைந்துள்ள பாடசாலைகளுக்கு அண்மையில் கூட்டு விடுதிகள் (**Cluster Quters**) அமைக்கப்பட்டு ஆசிரியர் களுக்குத் தங்குமிட வசதி அளிப்பதுடன் பாதுகாப்பு வசதிகளும் செய்துகொடுக்கப்படவேண்டும்.

4. கருத்தரங்குகள் செயலமர்வுகள் என்பன பாடசாலை நாட்களில் நடைமுறைப்படுத்தப்படுவது தவிர்க்கப்படவேண்டும். விடுமுறை தினங்களிலேயே இவை மேற்கொள்ளப்படவேண்டும். ஆயினும் விடுமுறை தினங்களில் ஆசிரியர் வருவதற்கு அவர்களுக்கு ஓர் கொடுப்பனவு வழங்கப்பட்டு அவர்களை ஊக்குவித்தல் அவசியமானதாகும்.

5. பாடசாலை நேரங்களில் போட்டிகள், விழாக்கள் நடத்தப்படுவது முழுமையாகத் தடுக்கப்பட வேண்டும்.

6. பாடசாலைகளில் ஆசிரியர் விருப்புடன் தொழிலாற்றுவதற்கான சூழலை உருவாக்கிக்கொடுத் தல் வேண்டும்.

7. யாவற்றுக்கும் மேலாக தீவகத்தில் மீள்குடி யேற்றம் துரிதமாக இடம்பெறுவதற்கான சூழலைத் தோற்றுவித்தல். இந்தச் சூழல் உருவாக வேண்டுமா யின் தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

8. இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாது விட்டால் தீவகச் சிறார்களின் எதிர்காலக் கல்வி கேள்விக்குரிய ஒரு விடயமாக மாறிவிடும் அபாயம் உள்ளது என்பதே எனது தாழ்மையான அபிப்பிராய மாகும். உரிய மட்டங்களில், உரிய நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்படவேண்டுமென மிகவும் பணிவன் புடன் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். தவறும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்சத்தில் தீவகத்தின் சிறார்களின் கல்வியை யாராலும் காப்பாற்ற முடியாது.

9. ஒரு பிரதேசத்தின் அபிவிருத்திக்கு அந்தப் பிரதேசத்தின் உள்கட்டமைப்பு அவசியமானதாகும். அந்த வகையில் அந்தப் பிரதேசத்தின் சகல வசதிகளும் ஆளணிகளும் இருத்தல் முக்கியமானதாகும். ஆனால் தீவகத்தைப் பொறுத்தவரையில் உள்கட்டமைப்பு பொருத்தமானதாக அமையவில்லை. ஆகை யால் கல்வி உட்பட எந்த அபிவிருத்தியையும் மேற் கொள்ள முடியாது. எனவே உள்கட்டமைப்பின் அடித் தளமான ஆசிரியர்கள், கிராம அலுவலர்கள், தொழில் நுட்பவியலாளர்கள், துறைசார்ந்த தொழிலாளர்கள் தீவகத்தில் நிரந்தரமாக வசிக்கும் சூழ்நிலை உருவாகும்வரை அபிவிருத்தி பற்றிப் பேசுவது ஏட்டுச்சுரக்காய் என்பதே உண்மையாகும். ❑

**"பயிற்றிப் பலகல்வி தந்து பாரை உயர்த்திடுவோம்"**

# ஆசிரியரின் கடமைகளும் பொறுப்புகளும்

## நல்லாசிரியரில் மிளிரும் பண்புகள்

- அதிபரோடு ஒத்துழைப்புடன் பணிபுரிவார்.
- ஆசிரியர் குழாத்தோடு சிறந்த தொடர்பை வைத்திருப்பார்.
- மாணவர்களின் நெருங்கிய ஆலோசகராக கருமமாற்றுவார்.
- கற்பித்தல் நடவடிக்கைக்காக நித்தம் ஆயத்தத்துடன் வருகை தருவார்.
- தம் தொழில்சார் திறன்களை மேம்படுத்திக் கொள்ள முனைவர்.
- மாணவ அபிவிருத்திக்கான அவரது அர்ப்பணிப்பு உயரிய மட்டத்தில் காணப்படும்.
- நித்தம் புதியனவற்றைத் தேடியவண்ணம் அவற்றுக்கேற்ப மாற்றமடைவதற்கான சாத்திய வழிகளைத் தெரிந்தெடுப்பர்.
- பாடசாலைக்கும் சமூகத்துக்கும் இடையேயுள்ள தொடர்புகள் வாயிலாகத் திருப்தியடைவர்.
- மாணவருக்கு உதவுகையில் களைப்படையமாட்டார்.
- பாடத்துக்குப் புறம்பான கருமங்களின் போது முன்னணியில் நின்று செயற்படுவார்.

## நல்லாசிரியர் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள்

01. பாடசாலை ஆரம்பமாகும் நேரத்துக்குக் குறைந்தது 15 நிமிட நேரமாவது முன்னதாக வருதல்.
02. தமக்குரிய நேரசூசியைப் பெற்று அதன்படி வகுப்புக்குச் சென்று கற்பித்துப் பாடப்பதிவுகளை மேற்கொள்ளல்.
03. தமக்குத் தேவையான பாடப்புத்தகங்கள், கைந்நூல்கள், கணிப்பீடு தொடர்பான வழிகாட்டல்கள் என்பவற்றைப் பெற்று வருடத்திற்குரிய வேலைத்திட்டங்களைத் தயாரித்து மேற்கொள்ளுதல்.
04. வேலைத்திட்டங்களை உரிய காலத்துள் பூர்த்திசெய்தல் நிறைவேறாத திட்டங்களை மேலதிக வகுப்புகள் வைத்துப் பூர்த்தி செய்தல்.
05. பாடக்குறிப்புகள், பாட மேம்பாட்டுத் திட்டங்கள், கணிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டம், கணிப்பீட்டுக் கருவிகள் ஆகியவற்றை உரிய முறைப்படி தயாரித்து அதிபர்/பிரதி அதிபர்/பகுதித் தலைவர் ஆகியோரிடம் அங்கீகாரம் பெறுதல்.
06. மாணவர்களின் பயிற்சிக் கொப்பிகளைத் திருத்தம் செய்தல், ஒப்பமிடல், வீட்டுப்பயிற்சிகள் வழங்கி திருத்துதல்.
07. வகுப்பில் நடைபெறும் அனைத்து வேலைகளையும் உரிய பதிவேடுகளில் பதிவு செய்தல்.
08. ஆசிரியர்கள் லீவில் செல்ல நேரின் மாணவர்களுக்குரிய செயற்பாடுகளைப் பதிற்கடமையாளருடன் கலந்துரையாடி ஒழுங்கு செய்தல்.
09. கற்றல் – கற்பித்தல் செயற்பாட்டைப் பயனுறுதித்தன்மை வாய்ந்ததாக ஆக்குவதற்கு கற்பித்தல் உபகரணங்களைப் பயன்படுத்துதல். பாடசாலை தர உள்ளீட்டுக்கான நிதி மூலம் மூலப்பொருள்களைப் பெறுதல்.
10. வகுப்பில் உள்ள மாணவர்களின் குடும்ப விபரங்கள், தனியாள் விபரங்கள் பேணுதல், மீத்திறன் மாணவர், மெல்லக் கற்கும் மாணவர் ஆகியோருக்கு ஏற்ப வேலைத்திட்டங்களைத் தயாரித்து, பயன்படுத்துதல்.
11. பாடங்களின் குறிக்கோள்களுக்கு ஏற்ப தேர்ச்சி மட்டங்களை வரையறை செய்தல், நியதிசார் கணிப்பீடுகளை மேற்கொள்ளல், புள்ளிகளை உரியவகையில் பதிவு செய்தல்.
12. கணிப்பீட்டுக் கருவிகளை முன்னரே திட்டமிடுதல், திறந்த வகையாக இருத்தல், மாணவர்களுக்கு முன்னரே கணிப்பீட்டு முறைபற்றி விளக்கத்தை வழங்குதல், இவைபற்றிய குறிப்புகளைப் பேணுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விபுலாநந்தர் அவர்களின் கல்விப் பணி

விளக்கு தாளிகை நடத்திய 2004 உலக ஆசிரியர்நாள் கட்டுரைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற கட்டுரை.

கட்டுரை





கே.ஞானரெத்தினம்

அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்
-புரட்சிக்கவி பாரதியார்

தமிழணங்கு பெற்ற தவப்புதல்வருள் ஒருவராக, முற்றிய துறவியாக, முத்தமிழ் வித்தகனாக, துறவுக்குப் புதியதொரு பரிமாணங்கண்டு மனித நேயத்துடன் வாழ்ந்து வந்த பெருந் தகை சுவாமி விபுலாநந்த அடிகள். தன்னலம் சிறிதுமின்றி தமி ழினத்தின் மேம்பாட்டுக்காகப் பணிகள் பல ஆற்றிய பெரு மைக் குரியவர் எமது தமிழ்த் துறவி விபுலாநந்தர்.

தற்பற்றின்றி தமிழ்ப்பற்றுடன் துலங்கிய தமிழ்த்துறவு ஒன்று இளங்கோவடிகள் தொடக்கம் நாவலர், விபுலாநந்தர், தனிநாயக அடிகள், பண்டிதமணி வரை வளர்ந்து வந்த மையை நாம் அறிய முடிகின்றது. தமிழ்ப் பணியும், கல்விப் பணியும் இந்துறவுப் பணிகளில் ஒன்றையொன்று பிரிக்க முடி யாதவாறு இணைந்து வளர்ந்துள்ளன.

1916இல் விஞ்ஞான டிப்ளோமாவுடன், மதுரைத் தமிழ்ச் சங்க பண்டித பரீட்சையிலும் சித்திபெற்ற விபுலாநந்தர் வேதாந் தம், சைவசித்தாந்தம், மெய்ஞ்ஞானம் கைவரப் பெற்ற வர். முத்தமி ழாம் இயல், இசை, நாடகம் மூன்றின் திறன் உணர்ந் தவர். மேற் கத்திய உலகில் கல்வி நெறியையும், தமிழ் மரபுச் சான்றாண் மைக் கல்வி நெறியையும் ஆன்ற நோக்கில் உணர்ந்து புதிய கல்வி நெறி கண்டவர். பிளேட்டோ, ரூசோ, கார்ல் மாக்ஸ், காந்தி யடிகள், சுவாமி விவேகாநந்தர் போன்றோரின் கல்விச் சிந்தனை களுக்கு ஒப்ப சுவாமி விபுலாநந் தரின் கல்விச் சிந்தனைகளும் இன்றைய நிலைமைகளுக்கு பொருந்துவன வாக உள்ளன.

நாட்டின் பல பகுதிகளில் ஆசிரியராகவும், இராம கிருஷ்ண சங்கக் கல்வி நிலையங்களின் முகாமையாளராக வும், அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தினதும் இலங்கைப் பல்கலைக்கழகத்தினதும் முதற் தமிழ் பேராசிரியராகவும், கல்வி ஆய்வுக்குழு, பாட விதான சபை, பரீட்சைச் சபை போன்ற வற்றின் உறுப்பினராகவும் விளங்கி சுவாமி விபுலாநந்தர் கல்வித்துறையில் ஆற்றிய பணிகள் அளப்பரியனவாகும். ஆளுமையையும், நல்லொழுக் கத்தையும், மனவலிமையை யும், தன்னம்பிக்கையையும் வளர்ப் பது கல்வி என்று சுவாமி விவேகானந்தர் கூறினார். அவரது வழி யைக் கடைப்பிடித்த சுவாமி விபுலாநந்தர் வாழ்க்கையின் அர்த்தத்தை அறிந்துகொள் வதற்கும், உள்ளத்தையும், உடலை யும் ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கும், சமூகத்தோடு பொருந்தி வாழ்வதற்கும், ஒழுக்கத்தை விருத்தி செய்வதற்கும், சமரச சமத்துவ உணர் வினை வளர்ப்பதற்கும் உதவுவதாக கல்வியைக் கண்டார். சமயக்கல்வி, விஞ்ஞானக் கல்வி, பெண் கல்வி, அழகியற் கல்வி, உடற்கல்வி, மொழிக் கல்வி, பல்கலைக் கழகக் கல்வி எனப் பல விடயங்களைப் பற்றி அவர் தெளிவோடு விளக்கி னார்.

வாழ்நாள் முழுவதும் கல்வியை ஒருவன் தொடர வேண்டும் என்றும், சிந்தனைத் தெளிவையும், வாக்குத் தெளிவையும் வளர்த்துக் கொள்ளவேண்டும் என்றும், கற்றவற்றை பிறரோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். உண்மையான ஒரு கல்விமான், மனிதர் மத்தியில் ஓர் இளவரச னைப்போல விளங்குவான் என்றும், செல்லுமிடமெல்லாம் வலிமையையும் தூய்மையை யும் அவன் பரவச் செய்வான் என் றும், நன்மையின் சக்தியாக அவன் விளங்குவான் என்றும் சுவாமி விபுலாநந்தர் கூறினார். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று பாடிய புலவர் கணி யன் பூங்குன்றன் அவர்களை உண்மையான ஒரு கல்விமான் எனப்போற்றியுள்ளதிலிருந்து "கல்விமான்" பற் றிய அவரது கணிப்பினை அறிந்து கொள்ளலாம்.

"மன்னுயிரனைத்தினையும் தன்னுயிர்போலக் கருதுகின்ற நற்குணத்தை இளம் பராயத்திலேயே நிலைபெறச் செய்ய வேண்டும்" என்று சுவாமி விபுலாநந்தர் சிறுவர் கல்வி பற்றி மிகுந்த அக்கறை செலுத்தினார். பயிற்சிபெற்ற ஒரு ஆசிரிய ராக இருந்த போது, 1914ல் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி ஆண்டு மலரில், அவர் ஆங்கிலத்தில் எழுதிய முதல் கட்டுரையில் ஆரம்ப கல்வியின் முக்கியத்துவம் பற்றியும், குழந்தை களின் இயல்புக ளைப் பரிவோடு புரிந்துகொண்டு, ஆசிரியர் கள் அவர்களை எவ்வாறு நெறிப்படுத்த வேண்டும் என்பது பற்றியும், ஆரோக்கியமும் உற்சாகமும் அளிக்கும் இதமான சூழலின் தேவை பற்றியும், மொழிக்கல்வி, ஒழுக்கக்கல்வி, சமயக்கல்வி ஆகியவற்றின் இன்றியமையாமை பற்றியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவாக் குறிப்பிட்டுள்ளார்.

பிள்ளைகளுக்கு இசைவான சூழலில் மிகுந்த பரிவோடு கல்வி ஊட்டப்பட வேண்டுமென்று சுவாமி விபுலாநந்தர் கருதி னார். கல்வியின் வாயிலாக மனிதர்களை உருவாக்கும் பணியில் ஓர் ஆசிரியர் பெறும் முக்கியத்தும் குறித்தும், அவருக்கு இருக்க வேண்டிய ஆற்றல்கள், பண்புகள் குறித்தும் சுவாமிகள் பல சந்தர்ப்பங்களில் கூறியுள்ளார். "எதைக் கற்பிக் கின்றார் என்பது எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் ஓர் ஆசிரியர் எவ்வாறு கற்பிக்கிறார் என்பதுமாகும்" என்று அவர் வலியுறுத்தினார்.

சுவாமி விபுலாநந்தர் தாய்மொழி மூலமான கல்வியை வற் புறுத்தியதற்கான முக்கிய காரணங்கள் இரண்டு. ஒன்று, கற்பவ னின் சுயசிந்தனை வளர்ச்சிக்கு அது கூடிய அனுகூலமாய் அமை யும், மற்றையது அவனுடைய சமூகம் அதனால் கூடிய பயனைப் பெறக்கூடியதாக இருக்கும் என்ப தாகும். பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் தாய் மொழியே போதனா மொழி யாக இருக்கவேண்டும் என்ப தனை வலியுறுத்தினார். ஓரினத் தின் மொழி தவிர்ந்த வேற்று மொழியில் கல்வி பயிலுதல் அவ் வினத்தின் கலாசாரத்தை யும், கல்வி முறையையும் மழுங்கடிக்கும் செயலாகும் என்ற சிந்தனையை முன்வைத்து, விஞ்ஞானம், கணிதம் போன்ற பாடங்களைத் தமிழ்மொழியில் போதிப்பதற்கு வேண்டிய தமிழ்ச் சொற்களை ஆக்கும் பணிகளிலும், ஆங்கில நூல்களை மொழிபெயர்ப்புச் செய்வதிலும் முன்னின்று உழைத்தார். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் இடம்பெற்ற "கலைச் சொல்லாக்கு அமுலாக்கல் குழுவின்" தலைவராக இவர் விரிவுபடுத்தினார்.

1943இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ் பேராசிரியராக ஆனதும், அதுவரை தமிழ் மொழிப் பாடத்தை ஆங்கில மொழி மூலம் பயின்று பரீட்சைக்குத் தோற்றிய நிலையை மாற்றி, தமிழ் மொழியிலே பயின்று, தமிழ் மொழி யிலே பரீட்சை எழுத வழி செய்தார். இயல், இசை, நாடகம், ஓவியம் போன்ற அழகியல் கல்வியை பாடசாலைப் பாடத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளவேண்டி யதன் அவசியத்தை உணர்த்தி, அதில் வெற்றியும் பெற்றார். உள்ளத்தைப் பண்படுத்தி, உள்ள உயர்வுக்கு வழி சமைப்பது அழகியற் கல்வி என்பது அடிகளார் கருத்தாகும். பல ஆண்டு களாக இசை ஆராய்ச்சியில் ஈடுபட்டதன் விளைவாக- யாழ் நூல், மதங்க சூளாமணி எனும் நாடகத் தமிழ் நூல்களை உருவாக்கினார். இது அடிகளாரின் அழகியல் கல்விப் புல மைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். இவ்விரு நூல்களும் அகில உலகும் போற்றும் நூல்களாக சிறப்புப் பெற்றுள்ளன.

"உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது" என்பது சுவாமி விபுலாநந்தரின் முத்தான மொழியாகும். உடல், செயற்பாடு, சடங்கு அனைத்தையும் மேவி உளச்செயற் பாட்டின் முக்கியத்துவத்தை சுவாமி அவர்கள் எடுத்துக் காட்டு கின்றார். இக் கருத்து சுவாமி அவர்களின் உளவியற் சிந்த னைக்குச் சான்று.

கல்வி, மக்களை சேவைக்கு, கொண்டு செல்ல வேண்டும் என்றும் இதனால் "கற்றோர் சமுதாயமே சான்றோர் சமுதா யம்" என்பதும் சுவாமியின் சீரிய கருத்தாகும். சுவாமி விபுலாநந்தரின் ஒவ் வொரு கருத்துக்களும் ஆழமானவையும்,



**வாழ்நாள் முழுவதும் கல்வியை ஒருவன் தொடர வேண்டும் என்றும், சிந்தனைத் தெளிவையும், வாக்குத் தெளிவையும் வளர்த்துக் கொள்ளவேண்டும் என்றும், கற்றவற்றை பிறரோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.**

விளங்கியமை இதற்குச் சான்றாகும்.

1922இல் சென்னை மயிலாப்பூரில் இருந்த இராம கிருஷ்ண சங்கத்தில் சேர்ந்து பயிற்சி பெற்ற சுவாமி விபுலா நந்தர் துறவு பூணுவதற்கு முன்னர் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியில் ஆசிரியராகவும், மானிப்பாய் இந்துக் கல்லூரி யின் அதிபராகவும் பணியாற்றினார். இக்காலத்தில் யாழ்ப்பா ணத்தில் பிரபல் யம் வாய்ந்த தேசிய மறுமலர்ச்சிக்கழகமாக "யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரஸ்" விளங்கியது. இச்சங்கச் செயற்பாட்டிற்கு சுவாமி விபுலானந்தர் அயராது உழைத்தார். இதனூடாக நாட்டிற்குப் பொருத்தமான கல்விச் சிந்தனை களையும் கோட் பாடுகளையும் உருவாக்கி, அக்கால ஆங்கில அரசிற்கு அறிக்கை சமர்ப்பித்தார்.

1925இல் இராம கிருஷ்ண சங்கப் பாடசாலைகளைப் பரிபாலிக்கும் பொறுப்பை ஏற்ற அடிகளார், 1926இல் யாழ்ப் பாணத்தில் அனாதை இல்லத்தை ஆரம்பித்து, அனாதைச் சிறு வர்களுக்கு கல்வி வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுத்தார். 1929 இல் மட்டக்களப்பில் சிவானந்தா வித்தியாலயத்தை ஸ்தாபித்து ஏழைகளுக்கான கல்வி வாய்ப்பினை மேலும் தீர்க்க தரிசனமிக் கதுமாகும். தற்போது பரவலாகப் பேசப்படுகின்ற கல்வி உரிமைகள், சமவாய்ப்புக்கள், சுயமொழிக்கல்வி, தொழில் நுட்ப கல்வி என்பவை பற்றி எல்லாம் சுவாமி அவர்கள் பல வருடங்களுக்கு முன்னரே கூறிவிட்டார்கள். தற்போது நடை முறையிலுள்ள புதிய கல்விச் சீர்திருத்தத்திலுள்ள அடிப்படை யான "ஐந்து திறன்கள்" பற்றியும் சுவாமி அவர் கள் முன்னமே சிந்தித்து விட்டார்கள்.

சுவாமி அவர்களுக்கு எல்லாத்துறைகளிலும் வல்லமை இருந்தது. தமிழ்மொழி, ஆங்கில மொழி இரண்டிலும் பாண்டித் துவம் பெற்றிருந்தார். கணிதம், விஞ்ஞானம், கலை ஆகிய எல்லாத்துறைகளிலும் வேறு ஒருவரால் இவ்வாறு புலமை பெற முடியாது என்றால் அது மிகையாகாது. வித்தகர் என்பது சுவாமியின் புலமைக்கு ஒரு பரிசாகும்.

கல்விப் பணிக்கே தம்மை முழுமையாக அர்ப்பணித்தவர் சுவாமி அவர்கள். "கல்விப் பணி செய்தார் கடவுள் பணி செய் தார்" என்பதற்கிணங்க சுவாமி அவர்கள் தமிழ் உலகம் உள்ள வரை வாழ்ந்து கொண்டே இருப்பார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இத்தாற் சகலருமறிய....

| | |
|---|---|
| நூல் | : விளையாடுவோம் வாசிப்போம் |
| எழுதியவர் | : றிஸானா றஹீம் சுறைஸ் |
| அனுசரணை | : சாகிரா கல்லூரி, புத்தளம் |
| விலை | : 240/- ரூபா |

"வாசிப்பு மனிதனைப் பூரணனாக்கும்" விளையாட்டாக வாசிப்பை வளர்த்துக் கொள்ள பல கற்றல் செயலொழுங்குகளை நூலாக்கித் தந்துள்ளார் ல்லை றிஸானா அவர்கள். முல்லைத் தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். புத்தளத்தை வாழ்விடமாக்கி வாழ்ந்து வருபவர். அவரால் ஆக்கப்பட்ட விளையாடுவோம் வாசிப்போம் என்னும் ஆசிரியர்களுக்கான கற்பித்தல் செயல்நூல் அண்மையில் வன்னி மண்ணில் தமிழீழக் கல்விக் கழகத்தினரால் அறிமுகம் செய்து வெளியிடப்பட்டது.




ஆசிரியர்கள் மாணவர்களின் வாசிப்புத் திறனை விளையாட் டுக்களின் மூலம் மேம்படுத்த நூல்தரும் வழிகாட்டல்கள் நிறைவாக உள்ளன. எழுத்தட்டைகள், சொல் லட்டைகள் படங்கள் என்பவற்றைப் பயன்படுத்தி மாணவர்கள் விளை யாட்டில் ஈடுபடுவதன் மூலம் வாசிப்பில் ஆர்வம் காட்டும் வகையில் ஒவ் வொரு அலகும் வடிவமைக் கப்பட்டுள்ளது. இது வாசி ப்பை மேம்படுத்தக் கற்பிக்கும் ஒவ்வொரு ஆசிரியரிடமும் இருக்க வேண்டிய ஒரு செயல் நூலாகும்.

அஞ்சலிக் குறிப்பு

# மறைந்தும் மறையாதோர் நிரலில்



அமரர் வேனுகோலவாணிதாசன் அவர்கள் மனித வாழ்க்கையின் வளர்ச்சிகளோடு பின்னிப் பிணைந்திருக்கும் இன்றியமையாத அருஞ்செல் வம் கல்வி என்பதை நன் குணர்ந்திருந் தார். அதனால் தான் மேற்கொண்ட எல்லாப் பணிகளையும் விட கல்விப் பணியிற் கூடுதலாகக் கருத்தூன்றிச் செயற்பட்டார்.

விடுதலைப்போர் வீறோடு நடைபெற்ற காலங்களில் வன்னி யில் மாந்தைகிழக்கு கல்விக்கோட்டப் பணிப்பாளராக கடமையாற்றியபோது வன்னி மக்கள் பொருளாதாரத்தடை மருத்துவத் தடைகளினால் அல்லற்படுகின்றபோது பிரத்தியேக எண்ணம் கொண்டவராக கட்டட வளங்கள் அணைகல (தளபாட) வளங்களின்றி மாணவர் பட்ட அவலத்தைப் போக்க பல்வேறு உதவும் நிறுவனங்களோடு தொடர்பு கொண்டு புதிய திட்டங்களுக் கூடாக பல இலட்சம் ரூபா பெறுமதி யான நூல்நிலையங்களுக்கான பொத்தகங்களையும் பள்ளி களுக்கும் கல்விக்கோட்டப் பணிமனைக்குமான உருக்கு அணை கல (தளபாட) வளங்களையும் பெற்றுக்கொடுத்ததை அப்பிரதேச கல்விச்சமூகம் மறக்காது. முல்லை கல்விப்பணி மனையில் விஞ்ஞானக்கல்வி உதவிப்பணிப்பாளராக இருந்தபோதும் கூட விஞ்ஞானம் பயிலும் மாணவர்களின் செய்முறைக்கான எந்த வளமும் இல்லாத போதும் சகல பள்ளிகளுக்கும் சென்று இருந்த எல்லா இரசாயனப் பொருட்களையும் ஒருங்கிணைத்து உயர்தர விஞ்ஞான மாணவர்களுக்கான செய்முறைகளை செய்வித்ததன் காரணமாக பெறுபேற்றையும் அதிகரிக்கச் செய்தார்.

சிறைப்பட்ட தன் சகோதரியின் மீட்புக்காக அயராது உழைத்ததுடன் தன் வேலையைக்கூட இழப்பதற்கும் தயாராக இருந்தார்.

வடமராட்சிக்கு இடமாற்றம் பெற்று வந்து ஹாட்லிக் கல்லூரியின் முதல்வராக பெரும்நெருக்கடி நிறைந்த வேளையிலும் கூட மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்காகப்பாடுபட்டார்.

வடமராட்சி கல்வி வலயத்தின் திட்டப்பணிப்பாளராக இருந்து தீவகக் கல்வி வலயத்தின் வலயப்பணிப்பாளராக நியமனம் கிடைத்தபோது பல வசதிக்குறைவுகள் இருந்தபோதும் நீண்டதூரம் பிரயாணம் செய்து இன்முகத்தோடு தீவக மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு மட்டுமல்லாமல் பள்ளி முதல்வர்கள் ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்கும் உதவினார். அந்த நன்றியை தீவகக் கல்விச் சமூகம் தாங்கள் நெஞ்சிலி ருத்தியே இறுதி நிகழ்வில் அலை அலையாகத் திரண்டு வந்து கலந்து கொண்டார்கள். அது அவரின் பணிக்கு சான்றாக அமைந்தது.

அமரர் வேனுகோபலவாணிதாசனின் மறைவினால் ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் அவரது துணைவியார் பிள்ளைகள் சகோதரிகள் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் தேற்றுவதோடு அவர் காட்டிச் சென்ற கல்விப்பணிக்கு அனைவரும் உழைப்போமாக! அதுவே அவருக்குக் கொடுக்கும் மதிப்பாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தின் ஆழத்திலிருந்து...

கவிதை

அன்புச் சகோதரனே!
சற்று நில்
உனக்குத்தான் இந்த முடங்கல்.

உன்னைப் போல் நானும்
பள்ளிகளில் பாடித்திரிய
அவ்வப்போது நினைப்பதுண்டு.

கல்வி கற்க வேண்டிய வயதினில்
கால் ஊனமுற்றுக்
கதறுகின்றேன் கஸ்ரத்தில்.

பள்ளி செல்ல நினைக்கையில்
குடும்ப பாரம்
என்னை அழுத்துகிறது.

பாமரன்
என்ற காரணத்தால் - பள்ளி
எனக்கு எட்டாக்கனி.

கந்தல் என்று
என்னை வெறுப்பதால் - கல்வி
எனக்கு பகற் கனவு.

அதனால்
பட்டினி கிடக்கும் நான்
பக்கத்து வீட்டுப் பாத்திரங்களுடன்...
பாடம் பயில்கிறேன்.

சகோதரனே! நீ
திருநாளில் வெடிக்கும்
ஒவ்வொரு சிறுபட்டாசிலும்
மகிழ்ச்சியில் மிதக்கின்றாய்.

ஆனால்,
பெரிய குண்டுப் பட்டாசு
என் எதிர்காலத்தையே
மங்கச் செய்துவிட்டதை அறியாயோ.

தாயின் வயிற்றில்
பாதுகாப்பாக இருந்த நான்
பூமியைப் பார்க்க நினைத்த போது
குண்டு மழை என்னை வரவேற்றது.

பிறந்த நாளிலிருந்தே
ஓடத்தொடங்கிய நான் இன்று தான்
ஓய்வாக இருக்கின்றேன் - ஏனெனில்
ஓடுவதற்குக் காலுமில்லை
ஓட இடமும் இல்லை.

பாரை மீட்க வந்த இயேசுவையே
ஓட வைத்தது தீய சக்தி
ஒட்டாண்டியான நான்
எம் மாத்திரம்.



அன்று வேலைக்குப் போன அப்பா
வீடு திரும்பவில்லை - இன்னும்
எதிர்பாக்கின்றேன்
வருவார் என்று.

போர் என்ற பேரில்
தமிழ் மாணவருக்கு வரும்
உதவிகள் உரிமைகள்
சுரண்டப்படுகிறது - இது கண்டு
நெஞ்சம் பொறுக்குதில்லை.

இப்படி,
முகம் தெரியாத, முகவரி இல்லாத
உன் வயதையொத்த நான்
கல்விக்காக ஏங்குகின்றேன்.

நண்பா!
புரிகிறதா என் சோகம்
சுடுகிறதா என் சுவாசம்.

இங்கு,
கால் உடைந்த கதிரைகளும்

விளக்கு தாளிகை நடத்திய 2004 உலக
ஆசிரியர்நாள் கவிதைப் போட்டியில்
இரண்டாம் பரிசு பெற்ற கவிதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழிவிழுந்த தளங்களும்
சல்லடையாக்கப்பட்ட கட்டடங்களும்
பற்றாக்குறையான ஆசிரியர்களும் அன்றோ
எம் வளங்கள்.

காலம் தவறிக்
கறையானுக்கு இலக்கான புத்தகங்கள்
எம் கல்வியின் முதுசங்கள்.

ஆனால் சோதரனே,! நீ
சுழலும் பஞ்சுக் கதிரைகளுடன்
குளிரூட்டப்பட்ட அறைகளில்
மின் விசிறிகளின் கீழ்
ஒய்யாரமாய் அமர்ந்து கொண்டிருக்கின்றாய்.

தேவைக்கதிகமான ஆசிரியர்களைக் கொண்ட
உயர் பள்ளிகளில்
கல்வி கற்கும் நீ - அவை
உனக்கு மட்டும் உரியது என்று எண்ணாதே.
அதில் என்னுடையதையும்
சேர்த்தல்லவா வைத்திருக்கின்றாய்.

பதின்நான்கு வயதினில்
பாடித்திரிந்து கொண்டிருக்கும் நீ
பாவப்பட்ட என்னையும் நினைத்துப்பார்.

சுதந்திரக்காற்றை நீ சுத்தமாய்
சுவாசிக்கும் போது,
சுமைதாங்க முடியாது பூமிவிடும்
பெருமூச்சையல்லவா நான் சுவாசிக்கின்றேன்.

புலமைப் பரிசில் என்னும் இறக்கைகட்டி - நீங்கள்
நாடு என்றும் கண்டம் என்றும் பறந்துதிரிய,
சிறகுகள் கட்டப்பட்டல்லவா - நாம்
கூண்டுக்கிளியாக உள்ளோம்.

என் விதியை - உன் துணையால் வெல்ல
உதவிக்கரம் கேட்கின்றேன்

உன்போல் நான் கற்று
என் வாழ்வில்
மலர்ச்சி தோன்றக் கேட்கின்றேன் - நீர்
என் சகமொழித்தோழன் என்பதால்,

கல்வி கற்க நீ
பள்ளிக்குப் போகு முன்
சற்று யோசி.

சகோதரனே - நீ
அனுபவிக்கப்போகும்
சந்தோஷமான எதிர்காலத்தை - உன்
சகோதரனும் அனுபவிப்பதில் தடையென்ன

இப்படித் தடையை மீறிக்
குப்பிவிளக்கில் படித்தும்
வெட்டுப்புள்ளியால் பல்கலைக்கழக
அனுமதி இழந்தோர் எத்தனை பேர்
சிந்தித்துப் பார்.
வாழ்க்கையை இழந்து
வாழத் தெரியாது
துடித்துக்கொண்டிருக்கின்றோம்.

சகோதர,
எம்வாழ்க்கையோடு வெட்டுப்புள்ளி
என்ற பேரில் விளையாடுபவர்களுக்கு
முடிவுகட்டத்தான் உன்னைக் கேட்கின்றேன்.

கசங்கிய பூக்களாகிய எங்களைக்
காகிதப் பூக்களாக மாற்றத்தான்
உன்னைக் கேட்கின்றேன்.

சகல வசதிகளோடும் கல்வி கற்கும் நீ
கிணற்றுத் தவளையாக இருந்து
எங்கள் கனவுகளைச் சிதைக்காதே!

அளவுக்கதிகமாய் கிடைக்கும் வசதிகள்
உன் அகக்கண்களை அல்லவா
மறைந்து விட்டன.

விழித்தெழு நண்பனே!
எனக்கு வழிகாட்டு
என்னையும் வாழவிடு

விளக்கை நோக்கி வரும்
விட்டில் போல் இருந்து
உன்னையும் இழக்காதே
என்னையும் அழிக்காதே

கல்விக்காக ஏங்கும் எம் கஸ்ரம்
கல்விக்கடலைக் கடந்த
மேதாவிகளுக்கு புரியப்போவதுமில்லை;
புரியவைப்பதற்கு நான்
புறப்படவுமில்லை.

ஆனால்,....
முள்ளை முள்ளால் தான்
எடுக்க முடியும்
என்பது இயற்கை நியதி.

பள்ளிப் படிப்பும் பாங்காய் வாழ்வதும்
என்ற எங்கள் கனவை நனவாக்க
பரஸ்பர உறவு கொண்ட
நண்பனால் முடியும்

நண்பனே,
உன் உறவுக்கு ஏங்குகின்றேன்
ஏற்றுக் கொள்வாய்.

உன் போல் கல்வி என்னும்
சுடர் ஒளியில் பிரகாசிக்க
உதவுவாய் என்று நம்பி
முடிக்கின்றேன்....



அருட்சகோதரி.
ஞா.இமெல்டா சுபாஜினி.

நன்றி
ஏக்கத்துடன்
சகமொழித்தோழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை



வாசித்தோம் வாசிப்போம்

**இந்திரா காந்தி தேசிய திறந்தநிலைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் - டாக்டர் வா.செ.குழந்தைசாமி அவர்கள் நூற்றாண்டு கொண்டாடும் சென்னை, ராமகிருஷ்ணன் மிஷன் மாணவர் இல்லத்தில் (23.06. 2004) ஆசிரியர்களுக்கு ஆற்றிய உரை. ஸ்ரீராம கிருஷ்ண விஜயம் மார்கழி இதழிலிருந்து வாசகர்களுக்குத் தருகின்றோம்.**

# ஆசிரியர்களிடமே அனைத்தும்...

சுவாமி விவேகானந்தரின் கல்விக் கொள்கையாகிய 'மனிதனை உருவாக்கும் கல்வி' என்பது மிக முக்கிய குறிக்கோளாகும். ஆனால் அது இன்றைய கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் இடம்பெறும் வாய்ப்பில்லை. ஆதலால் மனிதனை உருவாக்குதல் என்பது பள்ளிகளில்தான் நடைபெற வேண்டும்.

நம் நாட்டில் இன்று சுமார் 320 பல்கலைக்கழகங்களும், 16,000 கல்லூரிகளும் உள்ளன. ஆனால் 17 வயது முடிந்த மாணவ - மாணவிகளுள் 7% தான் உயர்கல்விக்குச் செல்கிறார்கள். மீதமுள்ள 93% பேர்+2 அல்லது அதற்குக் குறைவான படிப்பிலேயே நின்று விடுகிறார்கள்.

ஒரு நூற்றாண்டுக்கு முன்பே சுவாமி விவேகானந்தர், 'மக்களிடம் கல்வியும், புத்திசாலித்தனமும் எந்த அளவுக்குப் பரவியுள்ளது என்பதைப் பொறுத்தே ஒரு நாட்டின் முன்னேற்றம் அமைகிறது' என்றார்.

யப்பான் 1872 - இல் கல்வி பற்றிய ஒரு பிரகடனத்தைச் செய்தது: "இனிமேல் கல்வியறிவற்ற குடும்பத்தைக் கொண்ட சமுதாயமும், கல்வியறிவற்ற மனிதன் உள்ள குடும்பமும் நம் நாட்டிலிருந்து மறைந்துவிடும்".

இதற்குச் சில காலம் கழித்து பாரதி, 'அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல், பின்னருள்ள தருமங்கள் யாவும் பெயர் விளங்கியொளிர நிறுத்தல் அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்' என்றார்.

'வீடுதோறும் கலையின் விளக்கம், வீதிதோறும் இரணடொரு பள்ளி, நாடு முற்றிலும் உள்ளனவூர்கள் நகர்களெங்கும் பலப் பல பள்ளி - தேடு கல்வி இலாத தொரூரைத் தீயினுக்கிரையாக மடுத்தல்' என்றும் முழங்கினார்.

நம் முன்னோர்களும் யப்பானும் உருவாக்கித் தந்த உதாரணத்தை நாம் பின்பற்ற நினைத்தோம். ஆனால் அதில் வெற்றி பெறவில்லை.

1981 இல் இந்த நாட்டில் தற்குறிகள் (படிக்காதவர்கள்) 30 கோடி பேர் இருந்தனர். 1991 இல் 31 கோடி ஆயினர். நாம் கல்வியை விரிவாக்கினோம். ஆனால் மக்கள் தொகை யின் விரிவாக்கம் கல்வி விரிவாக் கத்தைவிட அதிகமானதால் 2001 இலும் அந்த எண் ணிக்கை குறைய வில்லை.

உலக வங்கி 1850 இலிருந்து 1960 வரை முன்னேறிய 34 நாடுகளைப் பற்றிய ஓர் ஆய்வு நடத்தியது. இந்த 34 நாடுகளிலும் அனைவரும் எழுத்தறிவு பெற்ற பின்னரே பொருளாதாரத்தில் முன்னேறி உள்ளனர் என்பது ஆய்வில் வெளிப்பட்ட முக்கிய உண்மை ஆகும்.

எனவே நாம் உண்மையில் பொருளாதார வளர்ச்சி காண வேண்டுமானால் எல்லோருக்கும் எழுத்தறிவு என்ற நிலையை எட்டவேண்டும். அதற்கு இன்னும் 30 கோடி மக்கள் எழுத்தறிவு பெற வேண்டும்.

இந்த 30 கோடி மக்களின் பின்னணியில் இருந்து வரும் மாணவர்கள் பெரும்பாலும் ஏழைகள். முதல் தலைமுறையாகக் கல்வி கற்பவர்கள். எனவே அவர்கள் கல்வி கற்பது மட்டும் போதாது. அவர்களது வாழ்க்கைக்கு வழிகாட்டுவதற்கு ஆசிரியர்களைத் தவிர வேறு யாருமில்லை என்பதை நீங்கள் உணர்ந்து செயற்படவேண்டிய முக்கிய கடமையும் உள்ளது. பள்ளி ஆசிரியர்களுக்கு இன்று இந்தச் சிறப்பான கடமையும் பெருமையான வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது.

இந்தக் கடமை ஆசிரியர்களுக்கு உள்ளது என்பதை சுவாமிஜி நூறு ஆண்டுகளுக்கு முன்பே கூறினார். ஆனால், என்ன காரணத்தினாலே இதைச் செயல்படுத்தத் தவறிவிட்டோம். இப்போதாவது செயல்படுத்த முனைந்திருக்கிறோம் எனும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து, மாணவர்களிடம் பண்பாட்டை வளர்க்க வேண்டும் என்றார் சுவாமிஜி. பண்பாட்டைக் கற்பிக்க நமக்குத் தகுதி வேண்டும். நான் மதுரையில் ஒரு கல்லூரிக்குச் சென்றிருந்தேன். அங்கு மாணவர்கள் ஒரு பலகை மீது 'அரசியல் தலைவர்களே, பெற்றோர்களே, நிர்வாகிகளே, ஆசிரியர்களே, எங்களுக்கு அறிவுரை வழங்கும் தகுதி உங்களுக்கு உள்ளதா?' என எழுதியிருந்தார்கள். .

அவர்கள் கேட்டது, 1978-79இல், அக்கேள்விக்கு அன்றும் சரி, இன்றும் சரி எனக்குச் சரியான விடை தெரியவில்லை. ஆனால், ஒரு விடை உள்ளது. மாணவர்களுக்கு அறிவுரை கூறும் தகுதி அரசியல்வாதிகளுக்கு இருப்பதாக மாணவர்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். பெற்றோர்களுக்கு உள்ளதா என்பதும் கேள்விக்குறி.

**Turner Broadcasting Systems** என்ற நிறுவனம் தைவான், சீனா, யப்பான், இந்தோனேசியா, தாய்லாந்து, இந்தியா ஆகிய நாடுகளில் இன்றும் 60% இளைஞர்கள் பெற்றோர்களையும் அடுத்தபடியாக ஆசிரியர்களையும் முன்மாதிரியாக வைத்தே தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறார்கள் என்பதே அந்த ஆய்வின் முடிவு.

நம் மாணவர்களுக்கு முன்மாதிரியாக அமையக் கூடிய குடும்பப் பின்னணி இல்லை. அவர்களின் குடும்பத்தார் பெரும்பாலும் எழுத்தறிவு இல்லாதவர்கள். எனவே, அவர்களது பொறுப்பையும் சேர்த்து மாணவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டிய கடமை உள்ளது என்பதை, ஆசிரியர்கள் பொறுப்புடன் உணர்ந்து செயல்பட வேண்டிய தேவையிருக்கிறது.

ஆசிரியர்களை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களது பண்பாடு அமைய வேண்டுமானால் ஆசிரியர்கள் மீது அவர்களுக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும்.

**முதலாவதாக** ஆசிரியர்களுக்கு மாணவர்களிடத்தில் அன்பும், அவர்களது முன்னேற்றத்தில் அக்கறையும் தேவை. அவர்களின் மீது அக்கறை இல்லை என்றால் உங்கள் மனப்பாங்கை நீங்கள் மாற்றிக் கொள்ள வேண்டும்: முடியாவிட்டால் தொழிலை மாற்றிக் கொள்ளுங்கள்.

**இரண்டாவதாக**, ஆசிரியர்கள் தெரியாத ஒன்றைத் தெரிந்தது போல் காட்டிக்கொள்வது தவறு. சாதாரண மாணவனாக இருந்தால்கூட அவனுக்கு, எது ஆசிரியருக்குத் தெரியும், எது தெரியாது என்பது நன்றாகப் புரியும். எனவே, நமக்குத் தெரியாத ஒன்றைத் தெரிந்ததுபோல் காட்டிக் கொள்ள வேண்டாம்.

ஆசிரியர்களின் ஒவ்வொரு செயலும் திறமையுடன் கூடியதாக இருக்கவேண்டும். மற்ற துறைகளைவிடக் கல்வித்துறைக்கு இவ்விதி அதிகம் பொருந்தும். ஏனென்றால் அலுவலகத்தில் ஒரு தலைமை குமாஸ்தாவிற்குக் கீழே அவரது உதவியாளர் ஒருவர் இருப்பார். ஆனால், ஓர் ஆசிரியருக்கு உதவியாளர் என ஒருவரும் இல்லை.

மாணவர்களிடத்தில் அன்பாய் இருந்து, தனது பாடத்தில் திறமையுமுள்ள ஓர் ஆசிரியரை மதிக்காத மாணவனை நான் என் வாழ்நாளில் பார்த்ததே இல்லை.

**மூன்றாவதாக** நாம் கற்பிக்க விரும்பும் ஒழுக்கம் நம்மிடம் இல்லாவிட்டால், நம்மால் அதைக் கற்பிக்க முடியாது. பல்கலைக்கழக மானியக் குழுவும், கல்வி அமைச்சகமும் 'நற்பண்புகளை வளர்க்கும் கல்வித் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்த வேண்டும்: வாழ்வின் மதிப்பீடுகளை (**Values**) மையமாகக் கொண்ட கல்வியை அறிமுகப்படுத்த வேண்டும்' என்று கடந்த 25 ஆண்டுகளாக விடாது கூறி வருகின்றன.

ஆனால் இன்று வரை அது நடைபெறவில்லை.

மதிப்பீடுகளை மையமாகக் கொண்ட கல்வித் திட்டம் 1986-இல் அறிமுகப்படுத்தப்பட்டது. பண்பாட்டை வளர்க்கும் கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டால் அதைக் கற்றுத் தருவது யார்? அதற்கான தகுதி உடையவர் யார்? மதிப்பீடுகளை மையமாகக் கொண்ட கல்வி நம் பாடத்திட்டத்தின் பகுதியாக இருக்குமானால் அதைக் கற்பிப்பது யார்?

உதாரணமாக, நாம் வேதியியலில் முதுகலைப் பட்டம் பெற்றிருந்தால், வேதியியல் கற்பிக்கலாம். ஆனால், ஒழுக்கத்தைக் கற்பிப்பதற்கு நமக்கு என்ன தகுதி உள்ளது?

உங்கள் நடத்தையே உங்கள் தகுதிக்கு அளவுகோல், உங்கள் ஆளுமையே அதற்குத் திறவுகோல். சிறந்த நடத்தை இல்லாதவர்களால் அதைக் கற்பிக்க இயலாது. சிறு நிகழ்ச்சி கூட ஒரு மாணவனின் அணுகுமுறையைப் பாதிக்கக்கூடும். மனநிலையை மாற்றக் கூடும்.

ஒரு தந்தை தனது இரு மகன்களுடன் பொருட்காட்சிக்குச் சென்றார். அங்கு டிக்கெட் தருபவர் '12 வயதிற்கு மேலிருந்தால் முழுக்கட்டணம், 12 வயதிற்குக் கீழே இருந்தால் அரைக் கட்டணம். உங்கள் மகன்களின் வயது என்ன?' என்று கேட்டார். அதற்கு அத்தந்தை, "மூத்தவனுக்கு 13, இளையோனுக்கு 11 வயது" என்றார்.

சீட்டைகொடுத்தவர், "இருவரும் மிக இளையவர்களாகத் தெரிகிறார்கள். இருவரும் 12 வயதுக்குக் குறைவானவர்கள் என நீங்கள் கூறியிருந்தால் நான் சந்தேகப்பட்டிருக்க மாட்டேனே" என்று கேட்டார்.

"நீங்கள் சந்தேகப்பட்டிருக்க மாட்டீர்கள், ஆனால், தனக்கு 12 வயதுக்கு மேலாகிவிட்டது என்பது என் மகனுக்குத் தெரியும். நாளை அவன் ஏதாவது ஓர் சந்தர்ப்பத்திற்காகப் பொய் கூறலாம் என என்னிடம் கற்றுக் கொள்வான். அதை நான் அவனுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டுமா?" என்று கேட்டார்.

இன்றைய மாணவர்களின் பின்னணியைப் பார்க்கும் போது அன்றாடம் வாழ்வில் தேவைப்படும் சில நடைமுறைகளில் கூட அவர்களுக்குத் தங்கள் குடும்பத்திலிருந்து எந்தவித வழி காட்டுதலும் கிடைப்பதில்லை என்பது தெரிகிறது.

அடுத்து, நேரம் தவறாமை என்று அடிக்கடி பேசுகிறோம். ஏழை நாடாக இருந்தாலும் பணக்கார நாடாக இருந்தாலும் என்னென்ன குறைகள் வந்தாலும் நாம் நமது ஏழைமையையே ஒரு காரணமாகக் காட்டிக் கொண்டிருக்கின்றோம். ஆனால், காலம் தவறாது வருவதற்கு ஏழைமை ஒரு காரணமே அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் 25 ஆண்டுகள் ஆசிரியராக இருந்துள்ளேன். எனக்குத் தெரிந்து வகுப்பிற்கு ஒருமுறைகூட நான் காலம் தவறிச் சென்றதில்லை. மனதில் உறுதி இருந்தால் காலம் தவறாமை இயலாமை அல்ல.

என் கல்லூரியில் மேஜர் மாலி என்று ஒரு முதல்வர் இருந்தார். அவர் கூறிய ஒரு சிறு செய்தி எனக்கு முக்கியமாகப்படுகிறது. நான் அப்போது ஆசிரியர். அவரிடம் போய் யாராவது பேசிக் கொண்டிருக்கும் போது அவரது மேசையின் மேல் கை வைத்தால், "இளைஞனே, உன்னால் நிமிர்ந்து நிற்கக்கூட முடியாதா? நீ நிற்பதற்கு என் மேசை உனக்குக் கைத்தாங்கலாகத் தேவையா?" என்று வேகமாகக் கேட்பார்.

சுவாமிஜி கூறுவார், 'ஒரு மனிதனின் ஆளுமையைத் தீர்மானிக்கும் சில குணங்களின் தொகுப்பே ஒருவனின் ஒழுக்கம் என்பது. அது மீண்டும் செய்யப்படும் பழக்க வழக்கங்களால் ஆனது. அந்தப் பழக்கங்களும் ஒருவனது நல்லொழுக்கத்தைச் சார்ந்தே அமையும். ஒரு சில நற்குணங்களை ஒருவன் தன் வாழ்க்கையில் ஏற்று அவற்றைப் பழக்கப்படுத்திக் கொண்டால் அவனது ஒழுக்கம் ஆளுமையையாகப் பன்மடங்கு பரிமளிக்கிறது'

எனவே, மேற்கூறியவை போன்ற சிறு செயல்கள்கூட ஒரு தனிமனிதனின் ஒழுக்கமுறையை நிர்ணயிக்கும்.

நான் அறிவியல், தொழில்நுட்பத்துறையைச் சேர்ந்தவன். பழமையில் திருப்தியடைய மாட்டேன். ஆனால், நமக்கு 3,000 ஆண்டுக்கும் மேற்பட்ட பாரம்பரியம் உள்ளது என நாம் பெருமைப்பட வேண்டும்.

நவீன சிந்தனையாளர்கள் என்று கூறிக்கொள்ளும் சிலர் மரபு என்பதே ஒரு பிற்போக்கு அணுகுமுறை என நம்புகிறார்கள். காட்டுமிராண்டி சமுதாயத்திற்கு மரபு இல்லை: வளர்ந்த, முன் னேறிய சமுதாயத்திற்கே உண்டு. அறிவியலில், ஆன்மீகத்தில், இலக்கியத்தில் தலை சிறந்த பாரம்பரியம் நமக்கிருக்கிறது என்பதை மாணவர்களுக்கு எடுத்துக்கூற நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

பொதுவாக மாணவர்களுக்கு இலக்கியம், ஆன்மீகம் பற்றித் தெரிந்திருக்கலாம். ஆனால், தலைசிறந்த அறிவியல் பாரம்பரியம் இருக்கிறது என்பதைப் பெரும்பாலும் அவர்கள் அறிந்திருக்க நியாயம் இல்லை.

கணிதத்தில் தலைசிறந்தது நம் நாடு. இன்று ஒன்றிலிருந்து பத்து வரை உள்ள எண்களை உலகுக்குக் கொடுத் தவர்களே நாம் தான். இவை நம் நாட்டில் தோன்றி அரேபியா வழியாக மேலை நாடுகளுக்குச் சென்றதால், அரேபிய எண்கள் எனப்படுகின்றன. கணிதத்திற்கு நம் நாட்டின் தலைசிறந்த பங்களிப்பு பூச்சியம் ஆகும். பூச்சியமில்லாமல் கணிதமோ, கணினியோ இல்லை.

அதைப் பற்றிக் கூறும்போது ஐன்ஸ்டீன், "இந்தியர்கள் தான் நமக்கு எண்ணிக்கையைக் கற்றுத் தந்தார்கள்" என்கிறார். எவ்வளவு தலைசிறந்த பாராட்டுரை இது!

என்ன காரணத்தாலோ நமது பள்ளிக் கல்வி நமது மாணவர்களுக்குப் பண்பாட்டை முழுமையாக உணர்த்துவதாக அமையவில்லை. சங்கீதம் கற்றுப் பாட வேண்டும் அல்லது மேடையில் நாட்டியம் ஆடவேண்டும் என்பது கூட வேண்டிய தில்லை. ஆனால், நாம் அவற்றின் அருமைகளைச் சிறிதாவது அறிந்திருக்க வேண்டும்.

ஒரு நாட்டின் பண்பாடு என்பது அந்நாட்டின் கலையிலும், இலக்கியத்திலும், தத்துவத்திலும் இருக்கிறது. அறிவியல் தொழில்நுட்பத்தில் அல்ல. இவற்றைப் பற்றிய ஒரு பின்னணியை நாம் இளைஞர்களுக்குப் போதிக்காவிட்டால், அவர்களுக்குப் பண்பாட்டைக் கற்பிக்கிறோம் என எண்ணுவதற்கு இடமே இல்லை.

இலங்கையிலும், ஐரோப்பா முழுவதிலும் நுண்கலைகள் கண்டிப்பான ஒரு பாடமாகும். மேல்நிலைப் பள்ளிப்படிப்பை முடிப்பதற்கு முன்பே ஒரு மாணவன் நடனம், இசை, தனது மதத்தின் அடிப்படைத் தத்துவம், அதன் வரலாறு ஆகியவற்றைப் பற்றிய அடிப்படை விபரங்களையாவது அறிந்திருக்க வேண்டும்.

இத்தகைய ஒரு பின்னணியை நமது மாணவர்களுக்குத் தரக்கூடிய ஒரு சூழ்நிலையை நம் கல்வித்திட்டம் உருவாக்க வேண்டும்.

சுவாமி விவேகானந்தர், 'சொந்த பலத்தில் நம்பிக்கை, அஞ்சாமை, உண்மை, சேவை போன்ற குணங்களை' வலியுறுத்துகிறார். இது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. ஆனால், இவற்றையெல்லாம் நம் மாணவர்களுக்கு எப்படிக் கற்பிப்பது என்பது பற்றி எண்ணிப் பார்க்க வேண்டும். அதற்கான வழி வகைகளை உருவாக்க வேண்டும். தன்னம்பிக்கை இல்லாது வாழ்வில் முன்னேற்றமில்லை என்பதற்குப் பல உதாரணங்கள் உண்டு.

சுவாமிஜி மனவலிமையுடன் உடல் வலிமையையும் வலியுறுத்துகிறார். 'வலிமையுடன் இருங்கள், கீதை படிப்பதைவிடக் கால் பந்து விளையாடுவதால் சொர்க்கத்திற்குச் செல்லும் வாய்ப்பு அதிகம்' என்கிறார்.

இதை நான் ஏன் குறிப்பிடுகின்றேன் என்றால் பொதுவாக உடல்நலம் பற்றி நமக்கு இருக்கும் அறிவு மிகக் குறைவு. உடல்நலத்தைவிட முக்கியமானது மனிதனுக்கு எதுவும் இல்லை. ஆனால், படித்தவர்கள் கூட அது தொடர்பாகப் பல செய்திகளை அறியாமலே இருக்கிறார்கள்.

உணவின் தன்மை பற்றிப் பெரும்பாலான மாணவர்கள் பாடமாகப் படிக்கவும், ஆசிரியர்கள் சொல்லித்தரவும் மட்டுமே நம் உணவு பயன்படுத்தப் படுகிறது. ஆனால், வாழ்க்கையில் பயன்படக்கூடியதாக அது உருவாவதில்லை. கற்பிக்கப்படுவதும் இல்லை.

இங்கு ஆசிரியர்கள் பல ஒன்றாகக் கூடுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அது மட்டும் போதாது, அப்படி ஒன்றாகச் சேரும் போது கலந்துரையாடல் நடைபெற வேண்டும். பேச்சாளர்கள் பேசுவதைக் கேட்டபிறகு ஒருவருக்கொருவர் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ள வேண்டும்.

ஆரோக்கியமான ஓர் உறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். தனிப்பட்டவர்களுக்கிடையேயான உறவு மட்டும் போதாது, அது அவர்களது நிறுவனங்களிடையே கூட்டு முயற்சியாக மலர வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்படைகளைப் பயன்படுத்தி கற்றல் கற்பித்தல்

கட்டுரை

**கதிரேசன் சுவர்ணராஜா**
விரிவுரையாளர்
கல்வியியற் கல்லூரி வவுனியா.

## ஒப்படை (ASSIGNMENTS)

ஒப்படை என்பதற்குப் பல்வேறு வரைவிலக் கணங்கள் கொடுக்கப்படுகின்றன. பொதுவான பின் வரும் வரைவிலக்கணங்களை நாம் நோக்கலாம்.

★ "கற்கின்ற பிள்ளைகளின் நலனுக்காக அப்பிள் ளையைச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துகின்ற ஒரு உத்தியாக பிள்ளைக்குத் தனித்தனியாகவோ அல்லது கூட்டமாகவோ செயற்படும் வகையில் வேலைகளைப் பிரித்து அளித்தல் ஒப்படை எனப்படும்.

★ கற்பவரின் அடைவுகளுக்காக அவர் சுயமாக செயற்பாடுகளில் ஈடுபடும் ஒருமுறை ஒப்படை எனப்படும்.

★ ஒப்படை என்பது ஆசிரியரின் வழிகாட்டலுக்கும் அவதானிப்புக்கும், அமைவாகப் பூர்த்தி செய்யப்படு கின்ற ஒரு மாணவர் செயற்பாடாகும். குறிக்கோளுட னான நிகழ்ச்சித்திட்டம் ஒன்றின் போது பயன்படுத்த முடியுமான மிகவும் செயற்றிறன் மிக்கதுமான ஒரு கருவியாகும்.

★ ஒப்படை என்பது ஒரு வகையில் கற்பித்தல் உபகரணமாகும். இன்னொரு வகையில் அது கற்றல் உபகரணமாகும். அதேவேளை அது மதிப்பீட்டுக் கருவியுமாகும். மாணவனைக் கருத்துடன் கண்டறிந்து கற்றல் செயற்பாட்டிலீடுபடுத்துவதற்கு ஆசிரியரால் பயன்படுத்த முடியுமான மிகச் சிறந்த ஊடகம் ஒப்படை யாகும்.

★ மாணவன் கற்கவுள்ள அலகை அறிமுகம் செய்யவும், அறிந்து விளங்கிக்கொள்வதற்கும் உதவும் வகையிலும் பிள்ளையின் கவனத்தை ஈர்த்து சிறந்த கல்வியைப் பெறுவதற்கு உதவும் வகையிலும் அளிக் கப்படுகின்ற வேலைப்பகுதியை ஒப்படை எனலாம்.

மேற்கண்ட வரைவிலக்கணங்களில் நான்கு பிரதான அம்சங்கள் உள்ளடங்கியிருப்பதை அவதானிக்கலாம்.

1. மாணவன் பெறும் கல்வியின் மூலம் எதிர்பார்த்த இலக்கினை அடைவதற்கு மாணவனால் செய்யப்பட வேண்டிய செயற்பாடு உள்ளடங்கியிருத்தல்.

2. ஒப்படைக்கப்படுகின்ற வேலைப்பகுதியின் நோக்கம் அல்லது கல்வியின் மூலம் அடையும் விளைவு உள்ளடங்கியிருத்தல்.

3. இலக்கினை நோக்கிச் செல்வதற்கு மாணவர்கள், ஆசிரியர்களால் வழிகாட்டப்படுவதுடன், இவ்வழிகாட் டலை மாணவர்கள் அனுமதித்தல்.

4. மாணவர்களின் செயற்பாடுகளின் வாயிலாகக் கல்வியுடன் தொடர்புபடுவதுடன், அதற்குரிய வசதி களை அளிப்பதன் மூலம் கல்வியினாற் பெறும் சிறந்த பயனை உச்ச மட்டத்திற்குக் கொண்டு செல்லல் எனலாம்.

பொதுவாக ஒப்படை என்பதை நாம் பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தலாம். "கற்பிக்கும் அலகை மாணவருக்கு அறிமுகம் செய்து அதனை வெற்றிகர மாகக் கற்பிப்பதற்கு மாணவர்களுக்கு ஒதுக்கிக்கொடுக் கப்படும் வேலைத்திட்டத்தை ஒப்படை எனக் குறிப் பிடலாம்."

### ஒப்படையின் வரலாறு

ஒப்படை முறை டால்டன் திட்டத்திலிருந்து (DAL TON PLAN) எழுந்ததாகும். அமெரிக்க ஆசிரியரான ஹெலன் பார்க்ஹெர்ஸ்ட் (HELAN PARK HURST) என்பார் தயாரித்த மாணவர் தாமே முயன்று கற்பதற் குரிய இத்திட்டமானது, 1920 ஆம் ஆண்டு முதன் முதலாக டால்டன் உயர்நிலைப் பள்ளியில் செயல்படுத் தப்பட்டதால் டால்டன் திட்டம் என அழைக்கப்படு கின்றது.

டால்டன் திட்டத்தின்படி பாடசாலையின் வேலையின் இயல்பிலும் செயன்முறையிலும் ஒரு மாறுதலை ஏற்படுத்த முனைகின்றது. கற்பிக்கவேண்டுமென ஆசிரியரிடம் எழும் எண்ணத்தின் அளவை விட கற்க வேண்டும் என்ற ஆர்வம் மாணவனிடம் அதிகமாக தோன்றுவதே கற்றலுக்கான அடிப்படையாகும் என்பது ஹெலன் பார்க் ஹெர்ஸ்ட் அம்மையாரின் சிந்தனையா கும். இதன் அடிப்படையிலேயே டால்டன் திட்டம் எழுந்தது.

டால்டன் திட்டத்தின் செயல்முறையாகவே ஒப்படை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்தது எனலாம். ஒப்படை டால்டன் திட்டத்தின் அடித்தளமாக அமைகின்றது. டால்டன் திட்டத்தின்படி ஒவ்வொரு மாணவனும் செய்து முடிக்க வேண்டிய வேலை பற்றிய குறிப்பு ஒப்படைக்கப்பட்டு, அவ்வேலை யைப் பற்றிய வரையறை கொடுப்பதுடன், அவ்வேலை யைச்செய்து முடிப்பற்குரிய தகுந்த வழிகளும் காட்டப்படும். இதுவே ஒப்படையாகும்.

## சிறந்த ஒப்படையின் பண்புகள்

ஒரு ஒப்படையின் சிறப்புத் தன்மை பற்றி முன்னரே தீர்மானித்தல் இலகுவானதல்ல. வகுப்புச் செயற்பாடு களின் தன்மைக்கும் சிறப்பிற்கும் ஏற்பவே ஒப்படையின் சிறப்புத் தன்மையினையும் தீர்மானிக்க முடியும். பொது வாக நோக்குமிடத்து ஒப்படையின் பின்வரும் அம்சங் கள் உள்ளடங்கி இருப்பது ஒப்படையினைச் சிறப்புடை யதாக்கும்.

★ ஒப்படைகள் தெளிவான நோக்கத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் உறுதியான தீர்மானங்களுக்கு இட்டுச் செல்லக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

★ வழங்கப்படும் ஒப்படைகள் மாணவரின் ஆற்றல், திறன், தேவை ஆகியவற்றுக்குப் பொருத்தமானதாக அமைந்திருத்தல் வேண்டும்.

★ ஒப்படைகள் எளிதில் மாணவரால் விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருத்தல் வேண்டும். மாணவர்க ளால் செயற்படுத்தக்கூடியதாகவும், எளிமையான செயற்பாடுகளிலிருந்து சிக்கலான செயற்பாடுகளை நோக்கிச் செல்வதாகவும் இருத்தல் வேண்டும். கருத் தற்ற விளக்கம், தேவையற்ற விளக்கங்கள் என்பன தவிர்க்கப்படல் வேண்டும்.

★ ஒரு ஒப்படையானது தேவையான அம்சங்களை ஒன்றிணைத்து தயாரிக்கப்படல் வேண்டும். எல்லா மாணவர்களும் விளங்கிக்கொள்ளக் கூடிய விதத்தில் தேவையான விளக்கங்களையும் விடயங்களையும் சேர்க்க வேண்டும். பொதுவாக மாணவர்கள் தமது ஒப்படைகளைச் செய்து முடிப்பதற்குப் பின்வரும் படிமுறைகளைக் கடந்து செல்லக்கூடிய வகையில் ஒப்படைகள் தயாரிக்கப்படல் வேண்டும்.

அவையாவன:

- இவ்வொப்படையில் நான் செய்யவேண்டியது என்ன.
- அதற்கான தகவல்களை எங்கிருந்து பெறலாம்.
- எந்த மூலாதாரங்களை நான் பயன்படுத்த வேண்டும்.
- எந்த மூலாதாரங்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும்.
- படித்த என்னென்ன விடயங்களைக் குறித்துக் கொள்ளவேண்டும்.
- எனக்குத் தேவையான தகவல்கள் கிடைத்து விட்டனவா?
- அவற்றை எவ்வாறு தொகுத்து எழுதுதல் வேண்டும்.

★ மாணவன் ஒப்படையைச் செயற்படுத்தும் போது எதிர்நோக்கக்கூடிய தடைகள், கஷ்டங்கள் ஆகியவை பற்றி முன்னரே எதிர்வு கூறக்கூடியதாக இருத்தல் வேண்டும். ஏற்படக் கூடிய இடர்கள், தடைகள் என்பனவ ற்றை நீக்குகின்ற முறைகள் பற்றிய தெளிவான அறிவு ஆசிரியருக்கு இருத்தல்வேண்டும். ஒப்படையில் இதேபோன்று தேவைகளுக்குப் பொருத்தமான அறிவுரைகளும் அடங்கவேண்டும்.

★ ஒப்படை மாணவர்களின் முன் அறிவுடன் தொடர் புற்றிருத்தல் வேண்டும். ஒப்படைக்கப்பட்ட புதிய அலகு டன் மாணவர்களின் கடந்த கால அலகும் தொடர் புறக்கூடிய வகையில் ஒப்படைகளைத் திட்ட மிடல் வேண்டும். இதனைச் செய்வதற்கு தெரிந்தவற்றி லிருந்து தெரியாததனை நோக்கிச் செல்லுகின்ற விதி யைப் பயன்படுத்துதல் பொருத்தமானது.

★ ஒப்படைகள் மற்றவர்களின் ஊக்கத்துடனான புத்தாக்கத்தை தூண்டக்கூடியதாக அமைதல் வேண் டும். ஒப்படைச் செயற்பாடுகளின் பாங்கு மாணவர்களின் ஆர்வத்தை தூண்டுதல் வேண்டும். எளிமையான வேலையிலிருந்து சிக்கலான வேலையை நோக்கி மாணவனை ஊக்கப்படுத்தக்கூடியதாக அமைதல் வேண்டும்.

ஒப்படைகள் மாணவர்களின் சிந்தனைத் தூண்டு வதற்காகவும், மகிழ்ச்சிகரமாக அதனை ஏற்று செயற்ப டுத்துவதாகவும் அமைதல் வேண்டும்.

★ ஒப்படையின் இறுதியில் பெறும் விளைவு குறுகிய கால, நீண்டகால பயனைத் தரத்தக்கதாக அமைந்திருத்தல் வேண்டும். அத்துடன் ஒப்படைச் செயற் பாடுகளின் விளைவுகள், மாணவரின் வாழ்க்கைக்கு பயன்மிக்கதாகவும், அதனைத் தொடர்ச்சியாக மாணவர் கள் தாமாகவே விருத்தி செய்யக் கூடியதாகவும் அமைதல் வேண்டும்.

★ மாணவர்களின் திறன்கள் பல்வேறு வகைப்பட்ட வையாகும். சில மாணவர்கள் இயல்திறன் விருத்தியை யும், சில மாணவர்கள் எண்ணக்கரு விருத்தியையும் எதிர்பார்க்கின்றனர். இவை யாவற்றுக்கும் பொருத்த மானதாக ஒப்படைகள் அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது மாணவர்களின் அறிவு, திறன் ஆற்றல் ஆகியவற்றை விருத்தி செய்யக்கூடியதாக அமைதல் வேண்டும்.

★ முன்வைக்கப்படுகின்ற ஒப்படைகள் கல்வி அனுபவங்களோடு தொடர்புறுவதாக அமைதல் வேண்டும். மாணவர்பெற எதிர்பார்க்கின்ற கல்வியை உரிய முறையில் கொண்டு செல்லல் இதன் அடிப் படையாக அமைதல் வேண்டும்.

★ மாணவர்களுக்கு வழங்கப்படும் ஒப்படைகள் மாணவர்கள் செலவிடக்கூடிய நேரத்திற்கு பொருந்தும் வகையில் தயாரிக்கப்படல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ ஒப்படைக்காகப் பயன்படுத்தப்படும் கருவிகள் மாணவருக்குப் புத்துணர்ச்சியை ஊட்டுவதாகவும், பிள்ளைகளின் தேவைகளுக்கும் பொருத்தமானதாகவும் அமைதல் வேண்டும்.

## ஒப்படையின் வகைகள்

ஒப்படையின் தன்மைகள், அதில் அடங்கும் விடயங்கள். நுட்பங்கள் என்பவற்றுக்கு ஏற்ப ஒப்படைகளைப் பின்வருமாறு வகுத்து நோக்கலாம்.

**★ பக்கம் அல்லது பந்தி முறையில் அமைந்த ஒப்படைகள்**

விதந்துரைக்கப்பட்ட ஒரு நூலிலுள்ள ஏதாவது ஒரு பந்தியில் அல்லது பக்கத்தில் அடங்கியுள்ளவைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் ஒப்படைகள் இவ் வகைக்குள் அடங்கும்.

**★ பாடநூலின் ஒரு அத்தியாய முறையிலமைந்த ஒப்படைகள்**

இம்முறை முதலாவது முறையைவிடவும் விரிவான ஒப்படை வகையாகும். பாடப்புத்தகத்தில் அல்லது வேறு நூல்களின் விரிவான பகுதியை உள்ளக்கியதாக இவ்வொப்படை அமையும்.

**★ ஆய்வுப் பொருளுக்கு அமைவான ஒப்படை**

காலத்திற்கிசைவான அல்லது பாடத்துடன் தொடர்புடைய ஆய்வுப் பொருளை இவ்வொப்படை வகை அடிப்படையாகக் கொள்கின்றது. ஓர் ஆய்வுப் பொருளை மையமாகக் கொண்டு கற்பித்தலுக்கு இவ்வகையான ஒப்படைகள் பெரிதும் உதவும்.

**★ பிரச்சினைகளுடன் தொடர்புடைய ஒப்படைகள்**

காலத்திற்கேற்ற அல்லது நடைமுறைப் பிரச்சினை ஒன்றினை மையமாகக் கொண்டு இவ்வகையான ஒப்படைகள் தயாரிக்கப்படலாம். ஒப்படைகளில் பிரச்சினை தொடர்புடைய ஒப்படைகள் பரவலாக பயன்படுத்தப்படுகின்றன. மாணவர்களின் ஆர்வத்தை அதிக அளவுக்குத் தூண்டும் ஆற்றல் அவ்வொப்படைக்கு உண்டு.

**★ செயற்றிட்ட அடிப்படையில் அமைந்த ஒப்படைகள்**

இயற்கையுடன் தொடர்புடைய பாடங்களைக் கற்பிப்பதற்கு இவ்வகையான ஒப்படைகள் பயன்படுத்தப்படுகின்றன. பொதுவாக இயற்கை விஞ்ஞானம், கைத்தொழிற்பயிற்சி, முன்னேற்றத்திற்கு இம்முறையை பெரிதும் பயன்படுத்தலாம். ஒரு குறித்த நோக்கத்தை - இலக்கை அல்லது பெறுபேற்றை அடைவதற்காக திட்டமிட்டு செய்யப்படுபவை செயற்றிட்டங்கள் எனப்படும்.

**★ பயிற்சி அடைப்படையில் அமைந்த ஒப்படைகள**

கல்விச் செயன்முறையில் ஆரம்ப காலந்தொட்டே இவ்வகையான ஒப்படைகள் பயன்படுத்தப்படுகின்றன. கணிதம், கணக்கீடு போன்ற பாடங்களில் இம்முறை தொடர்ச்சியாகப் பின்பற்றப்படுகின்றது.

**★ தனித்தனியாகவோ அல்லது குழுவாகவோ அறிக்கைப் படுத்துகின்ற ஒப்படைகள்**

வகுப்பிலுள்ள மாணவர்களின் ஆற்றல் தனியாள் வேறுபாடுகள் என்பவற்றை விளக்குவதற்கும் அது பற்றிய அனுபவத்தை வழங்கவும், இதனை உபயோகிக்கலாம். பொதுவாக மாணவர்களிடம் காணப்படும் தனித்தனி திறமைகளை வெளிக்கொணரக் கூடியவாறு தனியாகவும், குழுவாகவும் பொறுப்புக்களை ஒப்படைத்து, இவ்வகை ஒப்படைகளை மேற்கொள்ளலாம்.

**★ ஆய்வுடன் தொடர்புடைய ஒப்படைகள்**

சில பாடங்களைக் கற்பிக்கையில் ஒரே தடவையில் சில விடயங்களைக் கற்பிக்காது அவற்றை அனுபவத்தின் மூலம் கற்பதற்கு இவ்வொப்படை முறையைப் பயன்படுத்தலாம். உதாரணமாக: ஒரு சில விடயங்களைக் கற்பித்து அதனுடன் தொடர்புடைய சில விடயங்களை மாணவர்கள் ஆய்வின் மூலம் கண்டறிய வழிகாட்டிய பின் முழுமையாகப் பாடத்தைக் கற்பிக்கலாம்.

**★ செய்முறை ஒப்படைகள்**

மாணவர்களிடத்தில் உயர்திறன்ளை அபிவிருத்தி செய்வதற்கு இவ்வொப்படை முறையைப் பாவிக்கலாம். பொதுவாக இம்முறை எண்கணித பிரச்சினைகளைத் தீர்த்தல், கவிதைகளை மனனஞ்செய்தல், தட்டச்சு வேகப் பயிற்சி போன்றவற்றுக்கு பொருத்தமானதாகும்.

## ஒப்படை பற்றிய நுட்பங்கள

ஓர் ஒப்படையை எந்தச் சந்தர்ப்பத்தில் பயன்படுத்தலாம் என்பதை ஒப்படையை வழங்குவோர் கவனத்தில் கொள்ளவேண்டும். மாணவர்களின் உடல் நிலையைக் கவனித்து பொருத்தமான சந்தர்ப்பத்தில் ஒப்படையை வழங்கல் வேண்டும். பொதுவாக பாட அலகில் மாணவர் கூடிய கவனம் செலுத்த வேண்டிய பகுதிகளில் ஒப்படைகள் வழங்குதல் பயன்மிக்கதாகும். பாடத்தை ஆரம்பிப்பதற்கு முன்னரே (அதாவது பாடத்தைத் திட்டமிடும் போதே) ஒப்படை தொடர்பாக தீர்மானமெடுத்தல் பொருத்தமானதாகும். வழங்கப்படும் ஒப்படைகளின் தன்மைக்கேற்ப ஒப்படைக்கான கால அவகாசத்தை வழங்கலாம். சில மணித்தியாலங்களுக்குள் செய்ய கூடியதாக சுருக்கமானதாக இருக்கலாம். அல்லது இரண்டு மூன்று நாட்களில் அல்லது பல வாரங்களில் செய்து முடிக்கக்கூடியதாகவும் அமையலாம். செயற்பாடுகளுக்கேற்ப ஒப்படைக்குரிய காலம் வேறுபட்டதாக அமையலாம்.

## ஒப்படை ஒன்றைத் தயாரித்தல்

பின்வரும் படிமுறைகளுக்கமைய ஒப்படை ஒன்றைத் தயாரித்தல் வேண்டும்.

- ✦ நோக்கத்தை உருவாக்கல்
- ✦ நுண்ணாய்வு
- ✦ விருத்தி
- ✦ ஒழுங்கு செய்தல்
- ✦ மதிப்பிடுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ★ நோக்கத்தை உருவாக்கல்

ஒப்படையைத் தயாரிக்கும் போது ஒப்படையினுடைய நோக்கத்தை முதலில் தீர்மானிக்க வேண்டும். எவ்வகையான அறிவையும், திறன்களையும் மனப் பாங்கினையும் ஒப்படையினூடாக விருத்தி செய்தல் வேண்டுமென்பதில் குறிப்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். அவற்றைத் தீர்மானிக்கும் போது மாணவர் களிடம் ஏற்கனவே இருக்கக்கூடிய அறிவு திறன்கள் பற்றி அறிந்திருத்தல் வேண்டும். ஒப்படை நோக்கத் தைத் தீர்மானிக்கும் போது மாணவர்களது வகுப்பு மட்டம், சந்தர்ப்பங்கள் பற்றியும் நோக்குதல் வேண்டும்.

### ★ நுண்ணாய்வு

ஒப்படைகளைத் தயாரிக்கும் போது ஒப்படை செய் வதற்காக தேவையான வளங்கள், அவற்றைப் பெறக் கூடிய தன்மை, பெற்றுக்கொள்ளக்கூடிய இடம், காலம் என்பன பற்றியும் பெற்றுக்கொள்வதில் உள்ள தடை கள் பற்றியும் நுண்ணாய்வு செய்தல் அவசியமாகும்.

வழங்கப்படும் ஒப்படைகள் வகுப்புக் கட்டுப்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கங்கள் பற்றியும் மாணவர்கள் எதிர் நோக்கும் சிரமங்கள் பற்றியும் ஆராய்தல் வேண்டும். இவ் ஒப்படையின் மூலம் மாணவர் பெறும் பயன்கள் பற்றியும் மாணவர்களுடைய ஆர்வம் பற்றியும் பாடத் திட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள முடி யும் என்பது பற்றியும் ஒப்படை வழங்குவதற்கு முன் பாக சிந்தித்து ஒப்படையைத் தயாரித்தல் வேண்டும்.

### ★ விருத்தி

ஒப்படைகளைத் தயாரிக்கும் போது ஒப்படையில் ஈடுபடும் மாணவர்கள் ஒப்படையை நிறைவேற்றுவதற்கு சந்திக்கவேண்டிய நபர்கள், அவர்களைச் சந்திக்கும் முறைகள், அவர்களுடன் தொடர்புகளை விருத்தி செய்யும் முறைகள் பற்றியும் ஆசிரியர் வழிகாட்டுதல் வேண்டும். அத்துடன் குழுவாக ஒப்படையில் ஈடுபடும் போது குழுவிலுள்ள மாணவர்கள் விளங்கிக் கொள் வதற்கு உதவுதல் வேண்டும்.

### ★ ஒழுங்கு செய்தல்

ஒப்படைகளை ஒழுங்கு செய்யும் போது ஒப்படை தொடர்பான பத்திரங்களைத் தயார் செய்தல், ஒப்படை கள் தொடர்பான நூல்களையும், ஆவணங்களையும், நிலையங்களையும் குறிப்பிடுதல் வேண்டும்.

அடுதது ஒப்படை மதிப்பீடு தொடர்பான ஒரு முறையை ஒழுங்கு செய்தல் மிக அவசியமாகும். இந்த மதிப்பீட் டில் எதிர்பார்க்கப்படும் அம்சங்கள் தொடர் பாக முன் கூட்டியே மாணவருக்கு தெரிவித்தல் சிறப்பா னதாகும். மாணவர்கள் ஒப்படை செயற்பாடுகளில் ஈடுப டும் போது மேற்பார்வை செய்வதற்கான திட்டமொன்றை யும் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

## ஒப்படையை மதிப்பீடு செய்தல்

மதிப்பீட்டு நுட்பம் என்ற ரீதியிலும் ஒப்படை மிக முக்கியமாகின்றது. ஒப்படை வேலையில் மாணவன் அதனூடாகப் பெற்றுக்கொண்ட ஆற்றல்கள், திறன்கள், மனப்பாங்குகள் எவை என்பதை அவதானித்தும், அவர்களுடன் கலந்துரையாடியும் விளங்கிக்கொள்ள முடியும். ஒப்படையின் இறுதியில் மாணவனின் மொத்த அடைவு மட்டத்தினைக் கணிப்பிட முடியுமாதலால் அதற்குப் புள்ளிகளும் வழங்க முடியும்.

ஒப்படைகள் வழங்கப்படும் போது அதன் நோக் கங்களையும் படிமுறைகளையும் தெளிவாக வரைய றுத்து அதன் அடிப்படையில் புள்ளிகளை வழங்க முடியும்.

## ஒப்படையினூடாக உருவாக்கப்படும் திறன்கள்.

ஒப்படை முறையை ஆசிரியர்கள் கற்றற் செயற் பாட்டுச் சாதனமாகவும் ஒரு மதிப்பீட்டுக் கருவி யாகவும் கையாளுகின்றனர். எவ்வாறாயினும் ஒப்படை முறை யினூடாக பின்வரும் திறன்களை மாணவரிடத்தே ஏற்படுத்திக் கொள்ளலாம்.

1. ஒப்படையின் மூலம் மாணவர்கள் சுயமாகக் கற்றல் செயற்பாடுகளில் பங்கு கொள்வர். அதன் மூலம் படிப்படியாகத் தம்மை அபிவிருத்தி செய்து கொள்வர்.
2. கற்றல் செயற்பாடுகளுக்காக மாணவர்கள் ஊக்குவிக்கப்படும் தன்மை ஏற்படும்.
3. தனியாளாக வேலை செய்தல் தன்னம்பிக்கை யோடு இயங்குதல் தனது கடமைகளை நல்ல முறை யில் முகாமைப்படுத்தல் போன்ற கற்றல் பண்புகள் மாணவர்களிடம் அதிகரிக்கும்.
4. பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய திறன்கள் கண்டறிமுறைத் திறன்கள் என்பன அதிகரிக்கும்.
5. ஆசிரியர் அறிவைப் பகிர்ந்து வழங்குபவர் என்னும் செயற்பாட்டிலிருந்து விடுபட்டு கற்பித்தல் செயற்பாட் டினை முகாமைப்படுத்துனராக இயங்கும் நிலை உருவாகும்.
6. தகவல்களை ஆய்வதற்கும், சமூகத்துடன் தொடர் பேற்படுத்தவும் வேண்டிய திறன்கள் அதிகரிக்கும்.
7. சமூகமாக செயற்படல், குழு அங்கத்தவனாக செயற்படல் ஆகிய ஆற்றல்கள் விருத்தியடையும்.
8. சேகரித்த தகவல்களை அறிக்கைப்படுத்தும் திறன் அதிகரிக்கும்.
9. சமூகத்தில் இயங்குவதற்கு தேவையான மனப் பாங்கு விருத்தியுறும்.

எனவே, ஒப்படைகள் கற்றல், கற்பித்தல் செயற்பாடுக ளில் சிறப்பான இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளன என பதை அனுபவத்தின் மூலம உணர்ந்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# ஆசிரியர்

**– சொக்கன்**



**மூதறிஞர் கலாநிதி சொக்கலிங்கம் அவர்கள் இன்றில்லை. ஆனால் அவர் பரவச்செய்த அறி வுப் புனல் என்றுமது வற்றாது என்ற நம்பிக்கையோடு அவரின் ஆன்ம சாந்திக்காக வேண்டி அஞ்சலிக்கின்றோம்.**

*"முத்தமிழாய் எத்திசையும்*
*முன்னடைந்த*
*சொக்கலிங்கன்*
*வித்தகனாய் ஈழமெங்கும்*
*வீற்றிருந்தோன் –*
*தத்துவனாம்*
*வல்லவனின் வாய் மொழியும்*
*வழந்த பல நூல்களுமே*
*செல்லுமிந்த*
*மண்ணுயர்த்தும் சொல்*
*காலமதை ஆளுபவர் கருத்து*
*மெழில் சேர் நடையும்*
*ஞாலமிது உள்ள வரை*
*ஞாயிறவன் – சீல முடன்*
*வாழ்ந்தானே பூவுலகில்*
*வாழ்த்துரைக்கும்*
*வாழ்க்கைய தால்*
*ஆழ்ந்தானே மக்கள்*
*மனத்(து) ஆம்."*

**அவரது வாழ்க்கையை எண்ணிப் பெருமைகொள்வோம். அவர் ஆக்கி எமக்களித்த சிறு கதைகள் – கவிதைகள் – நாடகங்கள் – கட்டுரைகள் ஆயிரமாம். அவற்றிலிருந்து கல்விப் புலம் போற்றும் சிறுகதை யொன்றை அவரின் நினைவாக "விளக்கு" இதழில் வாசகர்களுக்குத் தருகின்றோம்.**

**திருமணத்திற்கான ஏற்பாடுகள் பூர்த்தியான நிலையில் எங்கிருந்தோ வந்த மொட்டைக் கடிதம் எல்லாவற்றையும் குழப்பிவிடுகின்றது. பெண்ணும் தந்தையும் குமுறுகின்றனர். அவர்களின் பரிதாப நிலையைக் கண்டு உருகுகின்றார் ஓய்வு பெற்ற ஆசிரியர் செல்வரத்தினம். அவரால் நிலைமையைச் சீராக்க முடிந்ததா? எப்படி?**

செல்வரத்தினத்திற்கு அந்தக் கிராமம் புதியதல்ல. சரியாக நாற்பது ஆண்டுகளை அவர் அதன் புழுதியி லும், மண்ணிலுந் தான் கழித்து விட்டிருந்தார். புதிதாக அங்கு "பேரூந்து" சேவை ஏற்பட்ட பொழுது பேரூந்திலே ஏறிய முதற்பிரயாணி அவர். உபதபாற்கந்தோரில் முதல் எழுதிய முதலும் கடைசியுமான 'காட' வாங்கிக் கால் கோள் விழா நடத்தி வைத்த பிரமுகரும் செல்வரத்தினந் தான். பத்துமைலுக்கு அப்பால் இருந்த இளம் மனைவிக்கு அனுப்பிய 'காட்' அது! அதன் பெறுமதியே தனிதான்.

அவருடைய கம்பீரமான ஒலியை மிரட்சி கலந்த மதிப்போடு கேட்ட மூன்று தலைமுறைகள் அங்கிருந்தன. புடைவை வியாபாரி பரமலிங்கம் தொடக்கம், சமீபத்தில் டாக்டர் பரீட்சையில் முதல் வகுப்பில் சித்தியடைந்த தேசிய சிவஞானம் வரை எல்லோருமே அவரிடம் மூக்கை உறிஞ்சி அரிச்சுவடி படித்தவர்கள்தாம். செல்வரத்தினத்தின் பிரம்புபட்ட தழும்புகள் மறைந திருக்கலாம். ஆனால் அவரின அறவுரைகளும் அறிவுரை களும் என்றைக்கும் மறையப் போவதில்லை.

அவர் ஏணிபோல் இருந்தார். அந்த ஏணியைத் துணை கொண்டு ஏறியவர்கள் மேலே மேலே போய் விட்டார்கள். அவரோ 'எல்லையறு பரம்பொருள்' போல் இருந்தபடியே இருந்தார். ஆசிரியப் பயிறசி கூடப் பெறாத சாதாரண தமிழ் ஆசிரியராகவே செல்வரத் தினம் இளைப் பாறினார். இப்பொழுது அவருக்கு முப்பதோ, நாற்பதோ, உபகாரச் சம்பளமாக வந்து கொண்டிருக்கிறது.

செல்வரத்தினத்திற்குப் பிள்ளை குட்டி என்ற பிக்கல் பிடுங்கல் எதுவுமில்லை. மனைவியும் சில ஆண்டுக ளுக்கு முன்பு போய்விடத் தனிக்கட்டையாகத் தான் அவர் வாழ்ந்து வந்தார். அவரு டைய தங்கையரின் மகன் முப்பது ரூபா வாங்கிக்கொண்டு நேரத் திற்குச் சோறுபோட்டு வருகிறான். மிச்சம் மீதியும் அவனது பிள்ளைகளுக்கே செலவாகிவிடும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீட்டினுள்ளே இருந்து மெல்லிய விசும்பல் ஒலி சற் றைக் கொருதரம் வந்து கொண்டிருந்தது. அந்த விசும் பல் ஒலி, தம்மிடம் ஐந்தாம் வகுப்பிலே கற்ற பூமணி யீடமிருந்துதான் வருகிறது**

ஆனால், செல்வரத்தினம் எதைப்பற்றியும் கவலைப் பட்டவர் அல்லர். ஆடலே புரி யும் அம்பலவாணர் அவரவர்க் கமைத்தனவே கிடைக்கும் அல்லாது, அதிக ஆசைப்படுவது தவறு என்பது அவரின் சித்தாந்தம். வயது அறுபதைத் தாண்டியி ருந்தும், கம்பீரம் குறையாத அஜானு பாகுவாய். சிரித்த முகத்தோடு அவர் இருப்பதைப் பார்க்க ஆச்சரியம் உண்டாக வேண்டிய தில்லை. அவரைப் போன்றவர்கள் அப்படித்தான் இருப்பார்கள்.

இன்று செல்வரத்தினம் தமது மாணவன் ஒருவனின் அழைப்பின் பேரில் அவனுடைய மகளின் கல்யாணத் திற்காய் அந்தக் கிராமத்திற்கு வந்திருந்தார்.

செல்வரத்தித்தின் வருகையால் விவாக வீடே அமர்க்களப்பட்டது. அவரைக் காணவேண்டும் என்றே அவரு டைய மாணவ பரம்பரை அங்கும் படை யெடுத்திருந்தது. அவர்களில் ஐம் பதைக் கடந்த கிழங்களும் இருந்தார் கள். பூனைமீசை அரும்பிய இளசுக ளும் இருந்தார்கள்.

அவர்களைத் தனித்தனி பெயர்சொல்லி அழைத்து அவர்கள் பாடசாலையில் செய்த குறும்புகளையும், அவர்களின் குறை நிறை களையும், பட்ட அடி உதைகளை யும் எடுத்துச்சொல்லி மகிழ்வித்துக்கொண்டி ருந்தார் செல்வரத்தினம்.

அவருடைய கூர்மை மழுங்காத நினை வாற்றல் அவர்களை வியப்பில் ஆழ்த்தியது. வயதைப் புறமுது கிடச செய்து கலகலப் போடு, குண்டுக் கல்லாய் இருக் கும் அவரின் ஆரோக்கிய நிலை பொறாமையை ஏற்ப டுத்தியது.



அவர் என்ன செய்வார்? பரீட்சைத்தாள்களுக்கும், பாடப் புத்தகங்களுக்கும் பலியாகாமல் நிம்மதியாக இருந்தது அவர் குற்றம் அல்லவே!

விவாக ஆயத்தங்கள் நடந்து கொண்டிருந்தன. வாழை கட்டுபவர்களும், அலங்காரங்கள் செய்பவர்க ளும் அங்கும் இங்கும் ஓடி ஆடி வேலை செய்து கொண்டிருந்தனர். இரவு பத்து மணிக்கு முகூர்த்தம்.

அதுவரை வீட்டிற்குள் அடைந்து கிடக்க விரும்பாத வராயச் செல்வரத்தினம் வெளியே புறப்பட்டார். அவரு டைய மாணவர் குழாம் அவருடன் சிறிது தூரம் வந்து கொஞ்சம் கொஞ்சமாகக் கலைந்துவிட்டது. செல் வரத்தினம் தனியாக அந்தக் கிராமத்தையே சுற்றி வந்தார். அவர் கற்பித்த பாடசாலை....

ஓலைக்கீற்றுக் கொட்டகையாய் இருந்த அது, இன்று புதிய ஓட்டுக் கட்டடம் பெற்றுக் தலைநிமிர்ந்து நின்றது. சூழவரப் பொட்டற்காடாகக் கிடந்த இடங்க ளில் வழுக்கைத் தலையில் மயிர் முறைத்தது போலச் சிறுசிறு வீடுகள் எழுந்திருந்தன.

அவர் வழக்கமாக அமர்ந்திருந்து இலக்கியம் கற் பிக்கும் மகிழமரம் அவரைக் கண்டதும் முறுவலிப் பதுபோலக் காற்றில் அசைந்து பூக்களாய்ச் சொரிந்தது.

பழைய நினைவுகள் படையெடுத்தன. இந்த மரத்திற்குக் கீழேதான் சங்கரன் தன் இனிமை யான குரலிலே சந்திரமதி புலம்பலை முகாரிராகத்தில் படித்தான். சம்பந் தன் முன்னால் இருந்த பையனுக்கு வாழை நாரால் வால் கட்டியதற்கு அடிவாங்க யதும் இந்த மகிழின் கீழே தான்.

செல்வரத்தினம் அந்த மகிழின் கீழே அமர்ந்திருந்து பழைய நினைவுகளை அசைபோட டார். ஆஹா! எவ்வளவு இனிய நாள்கள் அவை? நாற்பது வரு டங்களில் நாற்பது நாள்கள் கூட லீவு எடுக்காது, பாடசாலையும் தாமுமாய் அத்து விதமாகிப் போன காலங்களை அவரால் எப்படி மறக்க முடியும்?

உலகத்திலே ஆசிரியத் தொழில். ஆசிரியத் தொழில் தான என்று நினைத்துத் தலை நிமிர்ந்து நடந்த நாள்கள், வாழ்க்கையின் பொற்காலம் என்பதை அவ ரால் உணராதிருக்கக் கூடவில்லை. அந்த உணர்வில் அவர் கனிந்து கரைந்து போனது போலக் கண்களிலே நீர் முட்டிப்போய் நின்றது.

"பொய்யாய்ப் பழங்கதையாய் மெல்லப் போயினவே" என்று எண்ணியவராய் நெடு மூச்சை உதிர்த்தபடி எழுந்து நடந்தார்.

செல்வரத்தினம் விவாக வீட்டிற்குத் திரும்பியபொழுது அங்கே சாக்களை குடிகொண்டிருந்தது. பழைய கல கலப்பைக் காண முடியவில்லை. வாழை மரங்களிற் சில கட்டியபடி நின்று சோர்ந்தன. சில கட்டப்படா மலே கீழே கிடந்தன. அரைகுறை அலங்காரங்கள் அப்படியே கிடந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்காரர் மாத்திரம் முன்னால் இருந்த சாய்ம னைக் கதிரை ஒன்றிலே சாய்ந்து, கூரையைப் பார்த்த படி இருந்தார். வேறு ஒருவருமே அங்கில்லை.

வட்டினுள்ளே இருந்து மெல்லிய விசும்பல் ஒலி சற் றைக் கொருதரம் வந்து கொண்டிருந்தது. அந்த விசும் பல் ஒலி, தம்மிடம் ஐந்தாம் வகுப்பிலே கற்ற பூமணி யிடமிருந்துதான் வருகிறது என்பதைச் செல்வரத்தினம் கேட்டது மூலமே அறிந்து கொண்டார். மூக்கை உறிஞ்சி உறிஞ்சி இடைஇடையே கேருகிற குரலில் அழுவதற் குப் பூமணியால்தான் முடியும்.... அவள்தான் மண மகள்.... ஏன் அழுகிறாள்?

செல்வரத்தினத்தைக் கண்டதும் வீட்டுக்காரராகிய பொன்னுத்துரை எழுந்து நின்றார். எழுந்ததுமே மேல் துண்டால் வாயைப் பொத்திக் கொண்டு அழத் தொடங்கி விட்டார்.

செல்வரத்தினம் அவரின் தோள்களிலே ஆதரவோடு கைகளை வைத்து, "என்ன நடந்தது?" என்று கேட்டார்.

பொன்னுத்துரை பதில் கொடுக்கவில்லை. மௌனமா கத் தமது மடியிலிருந்து கடிதம் ஒன்றை எடுத்துக் கொடுத்துவிட்டு மீண்டும் அழுதார்.

செல்வரத்தினம் கடிதத்தை வாசித்தார். கடிதம் மணமகன் வீட்டிலிருந்து வந்தது. அதில், பூமணி யாரையோ காதலித்ததாகவும், காதலித்தவனோடு ஓடிப்போக எண்ணிருந்ததாகவும், அறிய வருவதால் இந்தத் திருமணத்திற்குத் தங்களால் இணங்க முடியாது என்று கண்டிருந்தது. குறித்த செய்தியை அறிவிக்கும் மொட்டைக் கடிதம் ஒன்றும் அதனுடன் இணைக்கப் பட்டிருநத்து. "உண்மை விளம்பி" அதனை எழுதியிருந் தான்.

செல்வரத்தினம் அந்த மொட்டைக் கடிதத்தை வாசித்தார். திரும்பத் திரும்ப வாசித்தார். அவர் முகம் மலர்ச்சியடைந்தது....

அந்தக் கடிதத்தோடு விரைவாக அவர் வெளியே சென்றதைப் பார்க்கப் பொன்னுத்துரைக்கு ஆச்சரியமாக இருந்தது.

பொன்னுத்துரை பின்னால் செல்லமுயல, செல்வ ரத்தினம் அவரைத் தடுத்துவிட்டுத் தாம் மாத்திரம் சென்றார்.

செல்வரத்தினம் ஓட்டமும் நடையுமாக நடந்து சென்று, அரை மைல் தூரத்திலிருந்த ஒரு வீட்டின் கதவைப் படீரென்று திறந்து கொண்டு உள்ளே சென் றார். "திருநாவுக்கரசு" என்று அவர் போட்ட சத்தத்தில் பழைய அதிகார மிடுக்குச் சற்றுங் குறையாமல் இருந்தது. திருநாவுக்கரசு பீதிப் புன்னகையோடு வந்து தமது முன்னாள் ஆசிரியர் முன் நின்றார்.

"இநத மொட்டைக் கடிதத்தால் நீ என்ன சுகம் கண்டிருப்பாய்? அநாவசியமாக ஒரு பெண்ணின் வாழ்க்கை யைப் பாழாக்குவதிலே உனக்கு என்ன லாபம்? என்னிடம் படித்ததற்கு இதுதானா பயன்? என்று அவர் இரைய இரைய நாற்பது வயதைக் கடந்து சற்றே நரைவிழத் தொடங்கியிருந்த திருநாவுக்கரசிற்குக் கண்கள் இருண்டு வந்தன.

"நான் நான்.... இதை எழுதவில்லை" பழைய மாணவ நடுக் கத்தோடு இந்தச் சொற்களை உதிர்க்க அவர்பட்டபாடு கொஞ்சமல்ல.

திருநாவுக்கரசு சொல்லி முடிக்கவில்லை செல் வரத்தினம் எரிமலையாய்க் கனன்றார். "முட்டாள் என்னையா ஏமாற்றப் பார்க்கிறாய்? இந்தக் கடிதத்தைப் பார்" செல்வரத்தினம் கடி தத்தைக் காட்டினார்.

அன்பார்ந்த சுந்தரலிங்கம் அவர்களுக்கு,

உங்கள் மகனுக்கு, பொன்னுத்துரையின் மகள் பூமணியை விவாகஞ் செய்விக்க எண்ணிருப்பதாய் அறிந்தேன். அதற்க்கு ஒரு தடையுண்டு. பூமணி கெட்ட ழிந்த பெண். அவளிற்க்கு ஒரு காதலன் இருக்கிறான். அவனோடு ஓடிப்போகக்கூட இந்தப் பெண் நினைத் திருந்தாள். உங்கள் நன்மைக்காகவே இந்தப் பயங்கர உண்மையை வெளியிடுகிறேன். இதற்க்கு ஆதாரங்கள் உண்டு.

இங்ஙனம்
உண்மை விளம்பி.

"அதற்க்கு, இதற்க்கு அவளிற்க்கு என்று எழுதாதே, அதற்கு இதற்கு அவளுக்கு என்று எழுது என்று எத்தனைநாள் சொல் லியிருப்பேன்? எத்தனை அடி களை வாங்கியிருப்பாய்.... திருநா வுக்கரசு, நீ எழுதிய தைத் தான் வேறு யாரைக் கொண்டோ எழுதுவித் தாய்... ஆனால் ஈயடிச்சான் காப்பி அடிப்பவனையல் லவா பார்த்துப் பிடித்தாய். முட்டாள்!" செல்வரத்தினம் சிரித்தார். திரிபுராந்தகச் சிரிப்பு அது! காலத்தால் தேயாத அந்தச் சிரிப்பு திருநாவுக்கரசை ஏழுவயதுப் பையனாக ஆக்கி ஆசிரியரின் காலடியில் விழவைத்தது.

"மன்னித்துக் கொள்ளுங்கள் வாத்தியார். பொன்னுத் துரையின் மகளுக்குப் பேசிய, பொடியனைத் தான் முதலிலே என் மகளுக்குப் பேசியிருந்தேன். சீதன விஷயத்தால் அது குழம்பிப்போய் விட்டது. அவனைப் பொன்னுத்துரை தன் மகளுக்கு மாப்பிள்ளை யாக்க நினைத்தது பொறாமையைத் தந்தது. அதனால் தான்... என்னை மன்னியுங்கள்!" திருநாவுக்கரசு அழாத குறையாக மன்றாடினார்.

"மன்னிக்க என்ன இருக்கிறது? இந்தக் கடிதத்தைக் கொண்டு போய் விஷயத்தை மாப்பிள்ளை வீட்டாருக்கு விளங்கப்படுத்து, பொன்னுத்துரையின் இருண்டு விட்ட வீட்டிலே விளக்கேற்றி வை போ."

திருநாவுக்கரசு மறு பேச்சின்றித் தோளிலே துண்டைப் போட்டுக்கொண்டு, மாப்பிள்ளை வீட்டிற்குப் பயணமானார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை

# பொம்மலாட்டம்

—மாவுறையூரான்—

# ஒரு கற்பித்தல் ஊடகம்



மனித வாழ்வில் மாற்றங்கள் இயல்பானவை. ஒவ் வொரு மனிதனும் தனது வாழ்வொழுங்கில் மாற்றங்களை ஏற்படுத்தும்போதுதான் வாழ்க்கை இனிமையாகின்றது. அதே நிலையில் மாற்றங்களில் புதுமையும் நவீன உலகின் இயை பாக்கத்தை அனுசரிக்கும் செயறறிறனும் விளைதல் வேண்டும்.

கற்றலும் கற்பித்தலும் ஒன்றிணைந்த நிலையிலேயே கற்றல் விசை அதிகரிக்கின்றது. பரீட்சையை நோக்கமாகக் கொண்ட கற்றல் விருத்தியிலிருந்து வாழ்க்கையே கல்வி யென்பதாய் உணரப் பட்டபோது, வாழ்தலே கல்வியின் வெளிப்பாடு என்பது வலியுறுத்தப்பட்டது. கற்பித்தல் முறைகளில் பல் வேறு புத்தாக்கச் செயலொழுங்குகளை நோக்கிய விரைவு நமக்கு வேண்டும் என்ற உண்மை புலப்பட்டது.

கல்வியில் மாற்றங்களை ஏற்படுத்தக் கல்வியியலாளர்கள் கல்வித் திட்டங்களைப் புதிது புதிதாக எழுதினாலும் அவற்றினைக் கற்கும் மாணவர்களுக்கேற்பக் கற்பித்தல் முறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தாவிட்டால் கற்றல் நிகழ்தல் சாத்தியமானதல்ல. அந்தச் சிந்தனையுடன் 1972 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட ஆரம் பக் கல்விக் கலைத்திட்ட மாற்றத்தின் போது அறிமுகம் செய்யப்பட்ட புதிய இனிய கற்பித்தல் முறைதான் பொம் மலாட்டம்.

இப்புதிய கற்பித்தல் முறை: அழகியற் கலை அம்சம் கொண்டதாகவும் சிறுவர்களை விரைவில் கவரும் ஆற்றல் கொண்டதாகவும் இருந்தமையால் ஆரம்பக்கல்வி கற்றல், கற்பித்தலில் அதன் அவசியம் பெரிதும் வேண்டப்பட்டது. இந்தப் புதிய முறை குறித்து அன்றைய நாட்களில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் கல்வியியலாளர்கள் விரிவாகச் சிந்தித்தனர்.

அன்று பாடவிதான அபிவிருத்தி நிலையத்தின் ஆரம்பக் கல்வித் தமிழ்ப் பிரிவுக்குப் பொறுப்பாக விருந்த அமரர் சிரோன்மணி இராசரத்தினம் அவர்கள் இப்பொம்மலாட்ட முறையை ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிப் பதன் மூலம் கற்பித்தற் செயற் பாட்டில் இணைத்துக் கொள்ளப் பெரிதும் முயற்சிகள் மேற் கொண்டார்.

1982ம் ஆண்டு ஜுலை மாதத்தில் தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தில் இதற்கென ஒழுங்கமைக்கப்பட்ட பொம்மலாட்ட வதிவிடச் செயலமர்வு ஒன்றுக்கு அந்நாள் சாவகச் சேரி யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய அதிபர் திரு.சி. நாகராஜா அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார்.

அதிபரும், நடிகரும். ஓவியரும் சிறந்த கலைஞருமான நாகராஜா அவர்கள். அப்பொம்மலாட்டச் செயலமர்வில் கலந்து கொண்டார். அச்செயலமர்வில் பயிற்சிகளை வழங்கியவர். யேர்மன் நாட்டைச் சேர்ந்தவரான ஒரு பெண்மணிஎன்பதால் அவர் ஆங்கிலத்தில் பேசிய வற்றை மொழி மாற்றி தமிழில் சொல்லும் பணியில் நாக ராஜா அவர்களே ஈடுபட்டிருந்தார்.

இவ்வதிவிடச் செயலமர்வில் கல்வி அதிகாரிகள், ஆசிரிய ஆலோசகர், ஆசிரியர்கள் எனப் 15 பேர் கலந்துகொண்டிருந்தனர். யேர்மன் பெண்மணி அறிமுகம் செய்த பொம்மைகளும், அவற்றைப் பயன்படுத்தி நடாத்திக்காட்டப்பட்ட பொம்மலாட்ட நிகழ்ச்சிகளும் சிறப்பாக இருந்தன. ஆனால், அவை எமது மண்ணுக்கும் கலாசாரத்திற்கும் ஏற்ப புதிய வடிவங்களைப் பெற வேண்டும் என்றும், எமது சிறுவர்களைக் கவரும் வகையில் வடிவமைக்கப்பட வேண்டும் என்றும், தீர்மானித்த அதிபர் நாகராஜா அவர்கள், தமக்கு இயல்பாகவே இருந்த திறமையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய பொம்மைகளை வடிவமைத்தார். அவற்றைப் பரீட்சார்த்த மாகத் தமது மட்டுவில் சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயச் சிறுவர் களுக்கு ஏற்றதான நிகழ்ச்சிக ளில் சேர்த்துக் கொண்டார். சிறுவர் கள் மிகுந்த ஆர்வத்தோடு பொம்மலாட்டக் காட்சி களைக்கண்டு இரசித்ததன் மூலம் கற்றலில் ஈடுபட்டு மகிழ்வதை அவதானித் தார். பொம்மலாட்டம், ஆரம்பக் கல்விக் கற்றல் கற்பித்தலில் இடம்பெறவேண்டும் என்ற துணிவோடு அவரது முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

பொம்மலாட்டம் ஒரு கலை. அதனைக் கற்றல் கற்பித்தல் செயன் முறையாக்குவதன்மூலம் ஆரம்பக்கல்வியை மேம்படுத் தலாம் என உணர்த்தி யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தின் ஊடாக ஆசிரியர் களுக்குப் பயிற்சியளிப்பதற்கு நாகராஜா அவர்கள் முன்வந்தார்.

அந்த நாள் சாவகச்சேரி கல்வி அதிகாரியான திருவாளர் கு.சோம சுந்தரம் அவர்கள் நாகராஜா அவர்களின் கலைச் சிறப் பைப் பயன்படுத்தி ஆசிரியர்களைப் பொம்மலாட்ட நிகழ்ச்சிக ளில் பயிற்சி பெறச் செய்தார். அந்தக் காலகட்டத்தில் யாழ்ப்பா ணத் தில் கல்வி அதி காரியாகவிருந்த அமரர் இராமுப்பிள்ளை சிவானந்தன் அவர்களும் பொம்மலாட்டம் சிறுவர்களைக் கவ ரும் ஓர் அழகியற் கலை என்பதையும், அதன்மூலம் ஆரம்பக் கல்வியின் விரிந்த பரப்பை மிக இலகுவாகக் கற்பிக்கலாம் என்ப தையும் தெரிந்து செயற்பட்டார்.

குழந்தைகளின் உடல் உள வளர்ச்சியிலும், சமூகமயமாக் கலிலும் பெரும் பங்காற்றுபவை விளையாட்டுக்களே. விளை யாட்டுக்களினூடாகப் பெறப்படும் அறிவு நிலையானது. அவற் றின் ஊடாகப் பெறப்படும் ஆற்றல்கள் வாழ்க்கைக்குப் பயனு டையவை என்ற கருத் தைக் கொண்டிருந்தவரான கல்வி அதி காரி அமரர் சிவானந்தன் அவர்கள் பொம்மலாட்டக் கலையை ஆரம்பக் கல்வி கற்றல் கற்பித் தலில் இணைத்துக்கொள்ளும் ஆர்வம் கொண்டார்.

சிறுவர்கள் ஐந்து வயதுத் தொடக்கத்திலேயே கதைகளுக்கு ஏற்ப விளையாட்டுக்களில் ஈடுபடுவதையும், ஏழு வயது முதல் தமது அனு பவங்களை மீள நடித்துக் காட்ட முயல்வதையும் ஆய்வுகள் உணர்த் துவதாகக் கண்டுகொண்டார். அந்தப் பருவத்திலேயே பார்த்தல், கேட்டல், உணர்தல், பேசுதல் ஆகிய திறன்களில் வியக்கத்தக்க விருத்தி ஏற்படுவதாகவும் தெரிந்து கொண்டு அந்தப் பருவத்தினருக்கான கற்றல் கற்பித்தலில் பொம்மலாட்டத்தைச் சிறந்த கற்பித்தல் ஊடகமாகச் சிவானந் தன் அவர்கள் வலியுறுத்தினர்.

அதிபரும் கலைஞருமான நாகராஜா அவர்கள் பொம்மலாட் டத் தில் பெற்ற நுண்ணிய பயிற்சிகளும் அதன் மீது அவர் கொண்ட ஈடுபாடும் சிறப்பான கற்றல் கற்பித்தலுக்குப் பொம் மலாட்டம் பயன்படும் என்பதை அறிந்திருந்தார். அதற்கு, அவ ரைப் பயன்படுத்தலாம் என்பதையும் சிவானந்தன் அவர்கள் உணர்ந்து கொண்டார்.

அமரர் சிவானந்தன் அவர்களின் சிறுவர் கல்வி விருப்பும், பல் துறை சார்ந்த ஆற்றல்களும் அவரைப் பொம்மலாட்டக் கலையை வளர்க்கத் தூண்டிநின்றன. நாடகம், கவிதை என்ப வற்றில் வலிமை கொண்ட எழுத்தாற்றலும், செயலாற்றல்களும் மிகக்கவரத் திகழ்ந்த சிவானந்தன் அவர்கள் பொம்மலாட்டக் கலைஞரான நாகராஜா அவர்களை விரும்பி நின்றார்.

ஆரம்பக் கல்வியில் நிறைந்த அறிவும், ஆற்றலும் மேம்படச் சிறுவர்களை மகிழ்வுடன் கற்கும் சூழலுக்குள் வைத்திருக்க வேண்டும் என்பதில் உறுதியானார். விளையாட்டின் ஊடாகவும், செயற்பாடுகளின் ஊடாகவும், கற்றல் கற்பித்தல் நிகழவேண்டும் என்பதை அவரது பாடசாலை மேற்பார்வைகள் உணர்த்தி நின்றன.

நடிப்பினாலும், அபிநயப் பாடல்களாலும் தம்மைச் சிறுவ னாக மாற்றிக்கொண்டு இயங்குவதில் வல்லவர். கற்றல் கற்பித் தலில் மாணவர்கள் விரும்பும் நுட்பங்களைத் தமதாக்கி அவர்க ளோடு இணைந்துகொள்வதில் திறமைசாலி. ஆரம்பக் கல் வியை மேம்படுத்த வேண்டும் என்பதைக் கருத்திற்கொண்டு அயராது உழைத் தார்.

ஆகையினால் பொம்மலாட்டத்தை ஆரம்பக்கல்வியின் கற்றல் கற்பித்தல் ஊடகமாகக் கொள்வதில் மிகவும் ஆர்வ முற்றார். அவ்வாறே அன்றைய பிரதிக் கல்விப் பணிப்பாளரான செல்வி திலகவதி பெரியதம்பி அவர்களும், பொம்மலாட்டமா னது மாணவர்களுக்கு மகிழ்ச்சியையும், கற்றலில் வேகத்தை யும் விவேகத்தையும் வளர்ப்பதாக உணர்ந்தார். கொத்தணிகள் தோறும் களப்பயிற்சிச் செயலமர்வுகளை ஒழுங்குசெய்வதன் மூலம் பொம்மலாட்டத்தில் சிறந்த ஆசிரிய முன்னோடிகளை உருவாக்கலாம் எனக் கருதினார். அதற்கேற்ற முன்னொழுங்கு களைச் செய்ய அவர் முன்னின்று உழைத்தார்.

கொத்தணிகள் தோறும் பொம்மலாட்டப் பயிற்சிச் செயலமர் வுகளை நடாத்தவேண்டுமெனில், வள ஆளணியினராகவுள்ள ஒரேயொரு துறைசார்ந்த வல்லுநரான அதிபர் சி.நாகராஜா அவர்களின் முழுமையான உயர்வளம் எவ்வாறு பயன்படுத்தப் படலாம் என்பதைக் குறித்து ஆராய்ந்தனர். அன்றைய யாழ்.குடாநாட்டின் கல்வியியலாளர்களின் ஒன்றுகூடலால், விளைந்தவைபற்றி அடுத்த விளக்கில் காண்போம்.

---

அணுகுண்டுக்கு முன்பு ஒருவேளை மனிதன் அசையாது நிற்கவும் கூடும். ஆனால் அன்பு கனிந்த சொற்களின் முன் அவன் பின்னடையத்தான் வேண்டும்.

– காண்டேகர்.

பிறருடைய துன்பங்களை நினைத்துப் பார்ப்பதால்தான் நம்முடைய துன்பங்களைச் சகித்துக்கொள்கின்றோம்.

– மார்க்ட்வெயின்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கல்வித்திட்டமும் ஆசிரியர்களும்

கட்டுரை

பல ஆண்டுகளாக நாம் மாணவர்களுக்கு ஒரேவித மான கல்வியையே ஊட்டி வந்திருக்கின்றோம். காலத் துக்குக் காலம் ஒருசில மாற்றங்கள் புகுத்தப்பட்ட போதி லும், அம்மாற்றங்கள் இலங்கைக் கல்விக் கொள்கை யில் எவ்விதமான அடிப்படை மாற்றத்தையும் ஏற்படுத்தி விட வில்லை எனலாம். அண்மையில் நடை முறைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கும் புதிய கல்விய மைப்பே, கல்வித்துறையில் எழுந்த பல்வேறு பிரச்சினை களுக்கும்தீர்வுகாண்பதாயமைந்துள்ளது. இப்புதிய கல்வியமைப்பில் ஆசிரியர்களாகிய எமக்குள்ள பங்கு என்னவென்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டியது அவசிமாகும்.

ஆங்கிலேயர் ஆட்சி இலங்கையில் நிலை நாட்டப் பட்ட காலத்தில் அரசியற்சேவைகளைச் செவ்வனே நடாத்துவதற்கு எழுதுவினைஞர்கள் பலர் தேவைப்பட் டனர். அதனால் எழுதுவினைஞர்களை உருவாக்குவதற் கேற்ற கல்வித்திட்டத்தினை அவர்கள் வகுத்தனர். நூற் றைம்பது ஆண்டுகளாக அக்கல்வித்திட்டமே நடைமுறை யிலிருந்து வந்தது சுதந்திரமடைந்து காலம் பல்லாண்டு களாகியும் குறிப்பிடத்தக்க மாற்றமெதுவும் கல்வித்துறையில் ஏற்படவில்லை. ஆண்டுதோறும் மூன்று இலட்சத்துக்கும் அதிகமானோர் க.பொ.த. (சாதாரண) தேர்வுக்குத் தோற்றுகின்றனர். க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தியடைந்த இலட்சம்பேர் இன்று வேலையின்றித் திண்டாடுகின்றனர். அவர்கள் எவ்வித தொழிற்கல்வியும் பயின்றிராமையால் அரசாங்க உத்தி யோகத்தைத் தவிர வேறு துறைகளில் ஈடுபடமுடியாத வர்களாகப் பரிதவிக்கின்றனர். பல்லாயிரக்கணக்கான பட்டதாரிகளும் வேலையின்றிப் பல ஆண்டுகளாகத் திண்டாடுகின்றார்கள். இவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கமுடியாது அரசாங்கமும் திண்டாடு கின்றது. இந்நிலை ஏற்பட்டமைக்குக் காரணம் நடை முறையிலிருந்து வந்த கல்வியமைப்பே எனலாம்.

இதுவரை காலமும் எட்டாம் வகுப்பு வரை மாணவர் கள் ஒரேவித கல்வியைப் பெற்றனர். அதன்பின்னர் கலை, விஞ்ஞானம், வர்த்தகம் என்று ஏதாவது ஒரு பிரிவிற் சேர்ந்து கல்வி பயின்று க.பொ.த தேர்வுக்குத் தோற்றினர். இதனால் கலைப் பிரிவு மாணவன் விஞ் ஞான விஷயங்களையறியாதவனாகவும், விஞ்ஞான மாணவன் இலக்கியம், வரலாறு, அரசியல் போன்ற விஷயங்களை அறியாதவனாகவும், வர்த்தக மாணவன் இவ்விரு பிரிவுப் பாட விஷயங்களையும் அறியாதவ னாகவும் இருக்க வேண்டியேற்பட்டது. இவ்வாறு எட் டாம் வகுப்பில் மாணவர்களைத்தரம்பிரிக்கும் வகுப் பில் மாணவர்களைத் தரம்பிரிக்கும் திட்டம் புதிய கல்வியமைப்பில் கைவிடப்படுகின்றது. மாணவர்க ளெல்லோருக்கும் ஒரேவித கல்வி ஏற்பாடே ஏற்படுத்தப் பட்டுள்ளது. இதனால் பலதுறையறிவும் நிரம்பியவனாக எதிர்கால மாணவன் விளங்குவான் என்தபதற் கமைய -

க.பொ.த.வகுப்பில் இரு ஆண்டுகள் கழித்த நிலையும் மாறி ஓராண்டிலேயே தேர்வுக்குத் தோற்றவேண்டும் என்ற ஏற்பாடும் புதிய கல்வித் திட் டத்திற் காணப்படும் சிறந்த அம்சங்களுள் ஒன்றாகும். ஒன்பதாம் வகுப்பில் தேசிய தராதரப்பத்திரம் மாண வர்களுக்கு வழங்கப்படும. இன்றுள்ளது போன்று அப் பத்திரத்தை வைத்துக்கொண்டு வேலைவாய்ப்பை மாணவர்பெற முடியாது. அதன் பின்னரும் ஈராண்டு காலம் கல்வி பயின்ற பின்னரே அவர்கள் உயர்கல்வி கற்கப் பல்கலைக்கழகங்களுக்கோ, தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கோ, ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக ளுக்கோ பிரவேசிக்கலாம். அல்லது எழுதுவினைஞர் போன்ற துறைகளில் ஈடுபடலாம்.

இப்புதிய கல்வித்திட்டம் தொழிற் கல்விக்கு முக்கிய இடமளிக்கின்றது. தொழில் முன்னிலைப் பாடநெறி மூலம் மாணவர் தொழிற்றுறைகளையும் அறிந்து கொள் ளும் வாய்ப்பைப் பாடசாலைகளிற் கல்வி கற்கும் போதே பெறுகின்றனர். அதனால் தம்முடைய ஆற்றல்க ளுக்கும், உளப்போக்குக்கும் பொருத்தமான தொழிலை எதிர்காலத்தில் மாணவர் மேற்கொள்ளச் சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. பாடசாலையைவிட்டு வெளியேறிய பின் தன்னம்பிக்கையுடன் வாழ்க்கைக்கேற்ற ஒரு தொழிலை மேற்கொள்ளவும், வாழ்வில் வெற்றியடைய வும் இம்முறை வழிவகுக்கின்றது. வலிந்து வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டிய நெருக்கடியும் அரசாங்கத்துக்கு ஏற்படாதுபோகின்றது. ஒரு பாடசாலையில் ஒன்றாகக் கல்வி கற்றோர் பல்வேறு தொழில்களில் ஈடுபடும்போது தொழில்களுக்கிடையில் உயர்வு தாழ்வு கற்பிக்கும் மனப்பான்மை தானாகவே நீங்கிவிடும். தொழில் மகத்துவம் பற்றிய உணர்வும் யாவருக்கும் ஏற்படும்.

பாட ஒன்றிணைப்பும் இப்புதிய கல்விக் கொள்கை யிற் காணப்படும் சிறப்பம்சங்களுள் முக்கியமானதொன் றாகும். ஐக்கியப் படுத்தப்பட்ட இப்பாட ஏற்பாட்டில் இரசாயனம், பௌதிகம், தாவரவியல், விலங்கியல் என்பன போன்ற பாடப்பிரிவுகள் இடம்பெறா. விஞ்ஞா னம் என்ற ஒரு பாடமாகவே இவை போதிக்கப்படும். அவ்வாறே புவியியல், அரசியல், பொருளியல், மானுட வியல், வரலாறு போன்ற பாடங்கள் யாவும் சமூகக்கல்வி என்ற ஒரு பாடமாக ஒன்றிணைந்து விடும். இவ்வாறே மொழி, கணிதம் முதலிய பாடங்களும் பிற பாடங்க ளுடன் தொடங்புறுத்திக் கற்பிக்கப்படும். இவ்வாறு பாடங்களை ஒருங்கிணைத்து மாணவர்களுக்குப் போதிக்கும் முறை மிகச் சிறந்ததோர் கல்விக் கோட்பாடு என்று கல்வி நிபுணர்கள் பலரும் பாராட்டுகின்றனர்.

எல்லோருக்கும் சமமான கல்வியளிக்கும் இப்புதிய கல்வித்திட்டம், பல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்கேற்ற சிறந்த பல அம்சங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள தெனினும் ஒரு சில குறைபாடுகளும் உடையதெனச் சிலர் சுட்டிக்காட்டுகின்றனர். பல

திருமதி. இ. ஆனந்தகுமாரசாமி
முன்னாள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைகளையும் ஒருங்கே கற்கவேண்டியிருப்பதால் ஒரு துறையிலேனும் பூரண அறிவைப் பெற வாய்ப்பு ஏற்படமாட்டதென்பது அவர்கள் சுட்டிக்காட்டும் முக்கிய குறைபாடாகும். நன்மைகளின் அளவோடு ஒப்பு நோக்கும்போது இக்குறைபாடுகள் மிக அற்பமானவை என்றே கூறலாம்.

பல அறிஞர்கள் சேர்ந்து தயாரித்த இத்திட்டம் வெற்றிபெறுவது ஆசிரியர்களது கையிலேயே தங்கியிருக்கிறது. தாம் கற்றுவந்த முறைக்கும், கற்பித்து வந்த முறைக்கும் முரணானதாகப் புதிய முறையில் பாடங்களைத் தொடர்புறுத்திக் கற்பிப்பது இன்றுள்ள ஆசிரியர்களுக்கு ஒருசுமையாகவும் தோன்றலாம். பலர் எதைப் படிப்பிப்பது, எப்படிப்படிப்பிப்பது என்று தெரியாமல் மலைக்கவும் நேரிடலாம். கலை பயின்ற ஆசிரியர் கலைப்பாடங்களையும் ஒருங்கிணைத்துப் கற்பிக்க முடியாது திகைக்கலாம். அவ்வாறே வர்த்தக ஆசிரியரும் திண்டாடலாம். ஆரம்பத்தில் இக்கஷ்டங்கள் எதிர்பார்க்கப்படுவனவும் தவிர்க்க முடியாதனவுமாகும்.

ஆசிரியப் பணியின் மகத்துவத்தையும், புதிய கல்வித்திட்டத்தின் சிறப்பம்சங்களையும் உணரும் நல்லாசிரியர்கள் தாம் அறிந்திராத புதிய துறைகளை முயன்று கற்றல் வேண்டும். தம்மை எதிர்நோக்கும் கஷ்டங்களை வென்று புதிய பாதையில் கல்வி போதிக்கத் துணிந்து முன்வரவேண்டும். புதிய துறையில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகக் கல்வி வட்டாரங்களில் ஏற்படுத்தப்படும் கல்விக்கருத்தரங்குகளில் தவறாது பங்குபற்றவேண்டும். தெரியாத விஷயங்களைத் தெரிந்ததாகக் காட்டிக்கொள்ளாமல் பல விஷயங்களையும் பலரிடமும் கேட்டு அறிவைத் தேடுதல் வேண்டும். இவ்வாறு ஆசிரியர்களாகிய நாம் ஆர்வத்தோடு உழைத்தாற்றான் பல அறிஞர்களின் சிந்தனையில் உருவாகிய புதிய கல்வித்திட்டம் பூரண வெற்றி பெறமுடியும். (1972)

---

**1971 ஆம் ஆண்டு யாழ்ப்பாண இந்துக்கல்லூரி அதிபராகவிருந்த திருவாளர் இ.சபாலிங்கம் அவர்களைப் பற்றி அன்றைய மாணவன் செல்வன் த.சொர்ணலிங்கம் எழுதிய கவிதை.**

# எங்கள் அதிபர்



வெள்ளைக் காரில் வருவாராம்
வேட்டி சால்வை அணிவாராம்
பிள்ளை போல மாணவரைப்
பேணி நல்லுரை தருவாராம்
பிந்தி வந்தால் அடிப்பாராம்
பிரார்த்தனை மண்டபம் வருவாராம்
சிந்தித்தன்பாய் பேசுவாராம்
செயலில் தன்னலம் அற்றவராம்
வெள்ளைக் காரைக் கண்டுவிட்டால்
வெருண்டே மாணவர் ஓடுவராம்
பள்ளிச் சிறுவர் பிழை செய்தால்
பயன்பெற எண்ணித் தண்டிப்பார்
வெள்ளை உள்ளம் கொண்டவராம்
மிகவும் கண்டிப் புடையவராம்
விளையாட் டதனில் ஊக்கமுடன்
வீரராகவும் வேண்டுமென்பார்.

**அன்றைய நாட்களில்; நீங்கள் கற்ற பள்ளிக்கூடத்தின் அதிபர். உங்கள் பள்ளி வாழ்வில் உங்களின் மனங்கவர்ந்த ஆசிரியர்; உங்களை உயர்த்திய – அல்லது உறுத்திய சம்ப வங்கள் பற்றியெல்லாம் நீங்கள் மனந்திறந்து எழுதலாம். தரமானவற்றை விளக்கு தாளிகையில் பிரசுரிப்போம். நிழற்படங் களை வரவேற்கின்றோம்.**

**–இதழாசிரியர்.**

மனிதன் தனக்குத் தெரிந்தவற்றை மட்டும் பேசுவானானால் உலகில் அமைதி நிலவும்


நல்லதை விதை
தீயதை புதை

கற்பித்தற் தொழிலை வெற்றிகரமாக நடாத்து வதற்கு குழந்தைகளின் நடத்தைகளை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும் என்பது அவசியமாகின்றது. எனவே ஆசிரியர்கள் தமது கற்பித்தலோடு மாணவரின் நடத்தைக் கோலங்களையும் அவற்றிற் கேற்ப எவ்வாறு கற்பித்தலை மேற்கொள்ளலாம் என்று உணர்ந்து கற்றலொழுக்கத்தை தீர்மானிக்கவும் கற்றுக்கொள்பவனே சிறந்த ஆசிரியனாவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனல் விழுங்கிய பொழுது



ஜல சமாதி
இந்த வார்த்தையின் பரிமாணம்
இப்போது புரிகிறது
போரில் நொந்து கிடந்த பூமியை
புனல் விழுங்கிப் போனது!

அழகிய எங்கள் கடலே
அரக்கனாய் எழுந்து
ஆணவம் கொண்டாயோ...!
உன் பொறுமையை
சீண்டிப் பார்த்தவர் யார்....?
உன் அமைதியை
குலைத்துப் போட்டவர் யார்....?
தண்ணீர்... உயிர்காக்கும்
என்றல்லவா உணர்ந்திருந்தோம்
உயிரோடு ஊர்குடித்து
மீண்டும் கடல் சேர்ந்து கொண்டாயே

வாழ்வு தந்த கடலே
சோறு தந்த கடலே
வஞ்சித்து விட்டாயே
பொருளாதார தடையிலும்
பிறளாது நின்றோம்
பகை புகுந்த போதும்
பணியாது நின்றோம்
பழி தீர்க்க முடிந்திருக்கும் என்பதால்
தண்ணீர் புகுந்த போதிலன்றோ
தவித்துப் போனோம்!
எந்த மொழிகளாலும்
வடித்துவிட முடியாத வலி!

காற்று காதுரச காதுரச
கணக்கற்ற கண்ணீர்க்கதைகள்
ஒளிப்படங்கள் உயிரைப் பிழிகிறது
கொத்தாய் குழந்தைகளை அணைத்து
முலைசுரந்தவள் மூர்ச்சித்து கிடக்கிறாள்
கர்ப்பிணியாய் போனவளை அள்ளி
கட்டியவன் கதறித் துடிக்கிறான்
ஒருவர் இறந்தால்
ஊர் கூடித் தேம்புவோம் - இங்கு
ஊரே மரித்துக்கிடக்கிறது.
தேம்புவாரை தேற்றுவார் யார்?
யாருக்காக யார் அழுவது
யாருக்காக யார் தொழுவது
எந்தக் கைகள் உயர்ந்து
எந்தக் கண்களை துடைப்பது....?

நாளை ... ஒரு தினம்
ஈர அலை கால் தழுவ
கரையமர்ந்து கவியெழுத
எந்தக் கவிஞனால் முடியும்
காற்று வாங்க காலாறநடக்க
எட்டு மூலைப் பட்டம் விட
எவனால் முடியும்?
அடியே... கடற்தாயே!
பேசடி .. பதில் கூறி மூசடி
மோதி மோதிப் பேசுகின்றாய்
ஐயோ.....! அலைபாசை அறியாமற் போனேனே
கமண்டலத்துள் கட்டியதாய் சொன்னார்கள்
எனக்கு மட்டும் இயைந்திருந்தால்
கடலே - உன்னை என்
கைகளில் முடக்கியிருப்பேன் - உன்
உயிர் குடித்து முடித்திருப்பேன்.

**— சோதியா**
**அன்னை பூபதி கலைக்கூடம்**
**நோர்வே.**

கவிதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி, சமுதாயம், சோஷலிஸம்

கட்டுரை

நாகரிக வளர்ச்சி தோன்றிய கால முதல் மனிதன், யாவும் நிறைவான உலகினைக் கற்பனை செய்து வந்திருக்கிறான். மனுக்குலத்தின் அபிலாஷைகளே இத்தகைய கற்பனையுலகுகளில் பெரிதும் இடம் பெற்றிருக்கின்றன. கற்பனை உலகுகளைச் சிருட்டித்தவர்களில் தத்துவஞானிகளும் இலக்கிய கர்த்தாக்களும் முன்னிற்கின்றனர். பண்டைய கிரேக்க தத்துவவாதி பிளேட்டோவிலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டிலே வாழ்ந்த கற்பனா சோஷலிஸ்டுகள் வரை பற்பல சிந்தனையாளரும் இலட்சியவாதிகளும் "வேண்டுதல் வேண்டாமை இலாத" பரிபூரண சமுதாயங்களைக் கற்பனையில் கண்டு விவரித்துள்ளனர். இவர்களிற் சிலர் தாம் கற்பனையிற் கண்ட சமுதாயத்தைச் சிறிய அளவிலேனும் உருவாக்கவும் முயன்றனர்.

இவ்வாறு முயன்றவர் அனைவரும் தமது அமைப்பிலே கல்விக்கு முதன்மைத்தானம் அளித்திருக்கின்றனர். உதாரணமாக, வரலாற்றிலே முதலாவது கற்பனையுலகான குடியரசு என்னும் இலட்சிய அமைப்பில், சிறுபிராயத்திலிருந்தே குழந்தைகளின் கல்வியில் அதிக கவனஞ்செலுத்தப்படுகினறது. இருபது வயதுவரை அனைவருக்கும் ஓரேவகையான கல்வி புகட்டப்படல் வேண்டுமென்று கூறுகிறான் குடியரசு ஆசிரியன் பிளேட்டோ. அவன் கண்ட குடியரசை ஆளுபவர்கள் தலையாய கல்விமான்களாய தத்துவவாதிகள். தத்துவ வாதியின் இதய வேட்கையே குடியரசு என்னும் நூலில் இழையோடுகிறது.

தமிழிலக்கியத்திலே, சிறப்பானதொரு கற்பனையுலகினைக் கண்டவன் கவிச்சக்கரவாத்தி கம்பன். பாலகாண்டத்திலே கோசல நாட்டு வளப்பத்தை வருணித்துவிட்டு, அயோத்திமா நகரின் சிறப்பினைக் கூறுகையில், செல்வமும் கல்வியும் சிறந்து விளங்கும் போகமாநகராக அது உள்ளது என்றான் கவிஞன். இது உற்று நோக்கத்தக்கது. நகரப்படலத்து ஈற்று இரு பாடல்களும் பிரசித்தம்.

**கல்லாது நிற்பார் பிறர் இன்மையின், கல்வி முற்ற**
**வல்லாரும் இல்லை அவை வல்லவர் அல்லாரும் இல்லை**
**எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தலாலே,**
**இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ**

பொருட் செல்வத்தையும் கல்விச் செல்வத்தையும் பூரணமாக யாவரும் பெற்றுள்ளனர் என்று கூறும் கம்பன், இறுதிப்பாட்டிலே, பொருட்சிறப்பால் நன்கு அமையக்கூடிய தவம், தருமம், அன்பு, அருள், போகம் முதலியவற்றுக்குக் கல்வியை அடித்தளமாகக் கொள்கிறான்.

**ஏகம் முதல் கல்வி முளைத்து எழுந்து, எண் இல் கேள்வி**
**ஆகும் முதல் திண்பணை போக்கி, அருந்தவத்தின்**
**சாகம் தழைத்து அன்பு அரும்பி தருமம் மலர்ந்து**
**போகங்கனி ஒன்று பழுத்தது போலும் அன்றே.**



கலாநிதி க.கைலாசபதி

இணையில்லாத அடியில் கல்வி என்னும் முளை முளைத்து கேள்விகளாகிய அடிச்சுவடுகளை விட்டு, தவமாகிய கிளைகளைப் பரப்பி, அன்பாகிய அரும்பு அரும்பி, தருமமாகிய மலர் மலர்ந்து, போகமாகிய கனி ஒன்று பழுத்தது என்று முற்றுருவமாகக் கவிஞன் கூறுகையில் கல்வியின் முக்கியத்துவம் தெளிவாகி விடுகிறதல்லவா?

தொன்று தொட்டு வந்துள்ள மெய்யியலாளரைப் போலவே சோஷலிஸ தத்துவத்தின் மூலபிதாக்களும், அதனை நடைமுறைப் படுத்தியவர்களும் கல்விக்குப் பிரதானமான இடத்தை அளித்தனர். இதன் பயனாகிய சோஷலிஸக் கல்வி என்னும் கோட்பாடு உருப்பெற்றது. சோஷலிஸக் கல்விக் கோட்பாடு என்பது சிந்தனையிலும் கற்பனையிலும் முகிழ்த்தது ஒன்று அன்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது சோஷலிஸத்தைக் கட்டியெழுப்பும் மாபெரும் பணியின் உடனிகழ்ச்சியாகவும் காரணமாகவும் காரியமாகவும் வளர்ச்சியுற்றதொன்றாகும். உலகப் புகழ் பெற்ற ருஷ்ய எழுத்தாளர் மாக்ஸிம் கார்க்கி 1925 இல் எழுதியது இவ்விடத்திலே பொருத்தமாயிருக்கிறது.

"மிகவும் வில்லங்கமான காலப்பகுதியிலே - 1919, 1920 ஆம் வருடங்களிலே - ருஷ்ய விஞ்ஞானிகளுடன் தொடர்புகொள்ளும் பெருவாய்ப்பு எனக்குக் கிட்டியது. எத்தகைய அடக்கத்துடனும் வீரத்துடனும், நடுநிலையுணர்வுடனும் மன உரத்துடனும், குளிர், பசி என்னும் கடும் வேதனைகளைத் தாங்கி, அவற்றை வென்று, அவர்கள் ருஷ்ய விஞ்ஞானத்தை வளர்த்தனர் என்பதை நான் கண்டறிந்தேன். அந்நியரது தலையீடும், முற்றுகையும் நிறைந்திருந்த அக்கால கட்டத்தில் உயிர் கொடுத்தும், உழைத்து, விஞ்ஞானத்தை அபிவிருத்தி செய்த வீரமிகு விஞ்ஞான தியாகிகளை நாம் என்றுமே மறக்கவியலாது."

சோஷலிஸக் கல்விக் கொள்கையும், அதன் ஓர் அம்சமான விஞ்ஞான அபிவிருத்தியும் சோஷலிஸ நிர்மாணத்தின் பிரிக்கவியலாத அங்கமாக அமைந்தமையையே கார்க்கி மேற்கண்டவாறு விவரித்துள்ளார். ஆகவே சோஷலிஸக் கல்விக் கோட்பாடு என்றது சோஷலிஸ சமுதாயத்தை அமைப்பவர்களின் அனுபவங்களிலிருந்து பிறந்ததொன்றாகும்.

முதலாளித்துவ சமூக அமைப்பிலே கல்வியைப் பற்றி முரண்பட்ட கருத்துக்கள் இரண்டு உண்டு. ஒவ்வொரு படிநிலையிலும் மாணாக்கருக்குக் குறிப்பிட்ட அளவு அறிவை வழங்குவதா, அல்லது தாமதமாகவே அறிவைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வழிவகைகளைப் பயிற்றுவிப்பதா சிறந்தது என்னும் ஐயமே முதலாளித்துவ அமைப்பில் கல்வியாளரை அலைக்கிறது. இது வாழ்க்கைக்கும் கல்விக்குமுள்ள முரண்பாட்டின் பிரதிபலிப்பேயாகும். இரண்டில் எது சிறந்தது என்பது வேண்டாத விவாதம். இரண்டும் வேண்டும் என்பதே சோஷலிஸ சிந்தாந்தமாகும். செயமுறைத் திறமைகளை வேறாகவும் அறிவை வேறாகவும் போதித்தல் சமுதாயத்தில் முரண்பாடுகளை மேலும் வளர்ப்பதற்கே ஏதுவாக அமையும். எனவே தான், 1918 இல் நடந்த அகில ருஷ்ய ஆசிரியர்கள் - சர்வ தேசியவாதிகள் மாநாட்டில் உரையாற்றிய லெனின் பின்வருமாறு குறிப்பிட்டார். "புதிய கல்விக்கொள்கையின் பிரதான பணி, போதனா முறைகளையும் சோஷலிஸ சமுதாய நிர்மாணத்தையும் ஒன்றிணைப்பதாகும்."

சோஷலிஸ நாடுகளில், அனுபவ ரீதியாக நிறுவப்பட்டுள்ள கல்வி அமைப்பின் சிறப்பியல்புகளை மேல் வரும் ஆறு கோட்பாடுகளின் அடிப்படையில் விவரித்து விளக்குதல் சாலும்.

### (அ) கல்வி, அரசின் பொறுப்பு:

பள்ளிக்கூடங்கள், ஏனைய கல்விநிலையங்கள் அனைத்தும் அரசாங்கத்தினாலேயே நிறுவப்பட்டு, பராமரிக்கப்பட்டு, வழிநடத்தப்படுகின்றன. இதனால் ஒரு முகப்பாடும், உள்ளியைபும், திட்டமிடப்பட்ட வளர்ச்சியும் சாத்தியமாகின்றன. தனிநபர்களுடைய இரக்க உணர்வினாலும் அவர்களது மனச்சாய்வுகளினாலும் கல்விக்கூடங்கள் பாதிக்கப்படாமல் இருக்க, அரச ஆதரவு வகை செய்கிறது. அதைப் போலவே வணிக நோக்கு கல்விக்குக் குந்தகம் விளைப்பதையும் இது நீக்குகிறது. சுருங்கக் கூறுவதாயின், பள்ளிக்கூடங்கள் சுமுகமாகவும் முறையாகவும் நடைபெறுவதற்கு அவை அரசாங்கத்தின் பராமரிப்பில் இயங்குவது இன்றியமையாததாகும்.

### (ஆ) மக்கள் அனைவருக்கும் சம சந்தர்ப்பம்:

எத்தகைய வேறுபாடுமின்றி நாட்டின் பிரஜைகள் அனைவருக்கும் கல்விக்கூடங்களிலே சமவாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன. தாய்மொழியிலே ஒருவர் கல்வி கற்க உரிமையும் வாய்ப்பும் இருக்கின்றது. ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் வழங்கும் நாட்டிற்கு சோஷலிஸம் உத்தரவாதப்படுத்தும் உன்னதமான ஏற்பாடுகளில் இதுவும் ஒன்றாகும்.

### (இ) ஆண் - பெண் சமத்துவம்:

சோஷலிச நாடுகளில், கல்வி நிலையங்கள் அனைத்திலும் இருபாலாரும் சேர்ந்தே பயிலுகின்றனர். ஆரம்பக் கல்வியிலிருந்து, உயர்கல்வி வரை சகல பல நிலையிலும் இரு பாலாருக்கும் சம சந்தர்ப்பம் இருக்கிறது. இதன் தருக்கரீதியான விளைவாக்கத் தொழில் பார்க்கும் பொழுதும், ஓய்வுகாலச் சம்பளம் பெறும்பொழுதும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் எத்தகைய ஏற்றத்தாழ்வும் இருப்பதில்லை. சோஷலிஸக் கல்விக் கோட்பாட்டு அடிப்படைகளில் இது ஒன்று எனலாம்.

### (ஈ) ஒரு சீரான பள்ளிக்கூடங்கள்:

வர்க்க, சமூக வேறுபாடுகள் எவற்றுக்கும் இடமளிக்காத வகையில் நாடு முழுவதும் ஒருங்கிணைக்கப்பட்ட, ஒரு சீரான, பள்ளிக்கூடங்களே உள்ளன. 'நல்ல' பள்ளிக்கூடங்கள், 'பெயர் பெற்ற' பள்ளிக்கூடங்கள் என்று விதந்து கூறவியலாத விதத்தில் ஒரே சீரான பள்ளிக்கூடங்கள் இருப்பதால், சம சந்தர்ப்பம் நடைமுறையில் காணப்படுகிறது. சோஷலிஸத்தின் வலிமைக்கும் முதிர்ச்சிக்கும் இத்தகைய அமைப்பு சிறந்த அளவுகோல் என்று கொள்வதில் தவறில்லை.

### (உ) மதஸ்தாபனங்களுக்கும் கல்விக்கூடங்களுக்கும் எதுவித தொடர்புமில்லை:

சோஷலிஸ நாடுகளில் திருச்சபை, மடாலயம் முதலிய சமய நிறுவனங்களின் பிடியிலிருந்தும் செல்வாக்கிலிருந்தும் கல்வி நிலையங்கள் யாவும் பிரிக்கப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளன. வழிபாட்டுச் சுதந்திரம் வேறு, சமயச் சார்புள்ள கல்விவேறு. பகுத்தறிவு சார்ந்த, விஞ்ஞான பூர்வமான, பொருள் முதல் வாத நோக்கிலமைந்த கல்வியை விருத்தி செய்வதற்கு, சமயத்தைத் தனித்து வேறாக்குவது, இன்றியமையாதது. ருஷ்யாவிலும் சீனாவிலும் இப்போக்கு நுட்பமாகக் கையாளப் பட்டுள்ளது.

**(ஊ) பள்ளிக்கூடத்திற்கும் சமூகத்திற்கும் நெருங்கிய தொடர்பு:**

கல்வி சம்பந்தமான சகல விஷயங்களிலும் பிரச்சினைகளிலும் பொது மக்கள் ஆழ்ந்த அக்கறை கொள்கின்றனர். பெற்றோர் சங்கங்களே அன்றி, தொழிற் சங்கங்கள், வாலிபர் கழகங்கள் போன்ற பொது ஸ்தாபனங்களும் கல்வி நிலையங்கள் தொடர் பான சித்தாந்த - நடைமுறைப் பிரச்சினைகளில் சிரத்தை எடுக்கின்றன. சில நிபுணர்களின் ஏகபோக உரிமையன்று கல்விக்கொள்கை. அதற்கு நிச்சயமான சமுதாயப் பண்பும் பணியும் இருப்பதனால் வெகுஜனம் உரிமையுடன் அதன் உருவாக்கத்திற் பங்கு கொள்கிறது. ஒரு சந்தர்ப்பத்தில் (1918) லெனின் சென்னார் "வாழ்க்கைக்குப் புறம்பான, அரசியலுக்குப் புறம்பான பள்ளிக்கூடம் ஒன்று இருக்க முடியும் என்பது பொய், போலி நடிப்பு."

சுருங்கச் சொன்னால், சோஷலிஸ அமைப்பிலே, அறிவை அறிவுக்காக மட்டுமலலாது, அதனை ஆக்கபூர்வமான வழிகளில் பிரயோகிப்பதற்கும், அப்பிரயோகம் முழுச் சமுதாயத்திற்கும் பயன்தரும் வகையில் அமைவதற்கும் ஏற்றவாறு கல்வி புகட்டுகின்றனர். இதனால், கல்விக்கூடங்களில் மட்டுமன்றி, பின்னரும் வாழ்க்கையில் தொடர்ந்து கல்வி விருத்தி செய்வதற்கு வாய்ப்புக் கிடைக்கிறது. தொடர்ச்சியான கல்வி **Continuing Education** என்று இக்காலத்தில் இக்கருத்தை வழங்குவர். கல்வி நாளடைவில் நடைமுறையனுபவத்துடனும், இடைவிடாத கற்றலின் பயனாகவும் நிறைவு பெறுகிறது.

இவ்வாறு அறிவு, பிரயோகம் ஆகிய இரண்டினதும் ஒருங்கிணைப்பால் முழுமையான கல்வியைச் சோஷலிஸ சமுதாயம் கட்டி வளர்க்கிறது. சிறு வயதிலிருந்தே, மாணாக்கருக்கு ஒழுக்கம், அழகுணர்ச்சி, உடற்பயிற்சி என்ற மூன்றையும் படிப்படியாக அறிவுறுத்த முனைகிறது. இவை மனித ஆளுமையை வளர்க்கவும் பூரணப்படுத்தவும் ஏதுவாகின்றன.

"சிந்தனையின் செம்மை" என்று கம்பன் கூறிய உயர் நிலை, சோஷலிஸக் கல்வியிலேயே சாத்தியமாகும். (1973)

✱

தமிழுக்குத் தொண்டு செய்ய எண்ணுகிறவர்கள் கலைச் சொற்களை உருவாக்கும் பணியில் இறங்கலாம். இதோ கணினிப் பயன்பாட்டாளருக்கான சில கலைச்சொற்கள்.

| | |
|---|---|
| சிப் | - சில்லு |
| பைட் | - எண்மி |
| மௌஸ் | - சுட்டு நுண்பொறி |
| டேட்ரா | - தரவு |
| செப்ட் வெயர் புறோகிறாம் | - மென்பொருள் நிரலாக்கம் |
| கீ போட் | - விசைப்பலகை |
| மெனு அப்பிளிகேசன் | - பட்டியல் பயன்பாடு |
| நெற்வேர்க் | - வலைப்பிணையம் |
| புளொப்பி டிஸ்க் | - நெகிழ் வட்டு |
| வெப் | - இணையத்தளம் |

சொல்வளம் ஒரு மொழியின் வளத்திற்கு மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். கலைச்சொற்கள் சேரச்சேரத்தான் நாம் நமது தாய்மொழியைப் பற்றி நன்கு மார்தட்டிக்கொள்ளமுடியும்.

பழமை இருக்கும் அளவுக்குத் தமிழில் புதுமை வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரசவ லீவு

பொதுநிர்வாக சுற்றறிக்கை 4/2005 இலக்க 3.02.2005 திகதிய சுற்றுநிருபத்தின்படி அனுமதிக்கக்கூடிய பிரசவம் தொடர்பான லீவுகள்.

பெண் அரச அலுவலர்களுக்கு ஒவ்வொரு பிள்ளைகளுக்குமாக முழுச்சம்பளத்துடன் 84 நாட்கள் பிரசவ லீவும், 84 நாட்கள் அரைச் சம்பளத்துடனும், 84 நாட்கள் சம்பளமற்ற லீவுகளும் 01.01.2005 முதல் அனுமதிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## 18.1 முழுச் சம்பளத்துடனான விடுமுறை

நிரந்தர, தற்காலிக, அமைய அல்லது பயிலுனர்பெண் அரச ஊழியர்கள் இந்தப் பிரிவின் கீழ் பிரசவ விடுமுறைக்கு உரித்துடையவராவார்.

பெண் அரச அலுவலரொருவர் உயிருள்ள ஒவ்வொரு பிள்ளை பிறப்புக்கும் முழுச்சம்பளத்துடனான 84 நாட்கள் விடுமுறைக்கு உரித்துடையவராவார். பிரசவம் நடந்து 04 வாரங்கள் செல்லமுன் அலுவலருக்கு மீண்டும் கடமையைப் பொறுப்பேற்க இடமளிக்கப்படமாட்டாது. இந்தப் பிரிவின்கீழ் விடுமுறை பெறுவதற்காக ஒரு வைத்தியச் சான்றிதழோ அல்லது குழந்தையின் பிறப்புச் சான்றிதழோ சமர்ப்பிக்க வேண்டும்.

பிரசவ விடுமுறைகளைக் கணிக்கும்போது அந்தக் காலத்திற்குள் வருகின்ற அரசாங்க விடுமுறைகள் மற்றும் சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமை தினங்களை அதில் உள்ளடக்கக் கூடாது.

இந்த விடுமுறை காலத்தை அலுவலரின் எஞ்சியிருக்கும் விடுமுறைகளிலிருந்து கழிக்கக் கூடாது என்பதுடன் இந்த விடுமுறைக் காலத்தை முழுச்சம்பளத்துடனான ஒரு விசேட விடுமுறையாக கருத வேண்டும்.

பிறக்கும்போதே மரணம் நிகழ்கின்ற ஒரு பிள்ளை பிறப்பிலும் பிரசவத்திலிருந்து 6 வாரங்கள் செல்லமுன் குழந்தை மரணிக்கின்ற சந்தர்ப்பத்திலும், குழந்தையின் மரணச் சான்றிதழைச் சமர்ப்பிக்குமிடத்து விசேட சம்பளத்துடனான விடுமுறையாகப் பிள்ளை பிறப்பு நிகழ்ந்த திகதி முதல் 6 வாரகால விடுமுறை வழங்கவேண்டும்.

## 18.2 அரைச்சம்பள பிரசவ விடுமுறை

முழுச் சம்பள லீவு 84 நாட்கள் முடிவடைந்த பின் குழந்தையைப் பராமரிப்பதற்காக 84 நாட்கள் அரைச்சம்பள லீவைப் பெறுவதற்கு உரித்துடையவராவார்.

இந்தக் காலகட்டத்திற்குட்பட்ட சனிக் கிழமை, ஞாயிற்றுக்கிழமை பிரசித்த லீவு நாட்கள் யாவும் உள்ளடக்கப்பட வேண்டும்.

## 18.3 சம்பளமற்ற பிரசவ விடுமுறை

முழுச்சம்பள லீவு 84 நாட்களும், அரைச்சம்பள லீவு 84 நாட்களும் பெற்றபின் மேலும் பிள்ளையைப் பராமரிப்பதற்காக தேவைப்பட்டு விண்ணப்பிப்பின் 84 நாட்கள் சம்பளமற்ற லீவுக்கு உரித்துடையவராவார்.

லீவுகள் கணக்கீடு செய்யும்பொழுது சனிக் கிழமை, ஞாயிற்றுக்கிழமை, பிரசித்த லீவு விடுமுறை என்பன உள்ளடக்கப்பட வேண்டும்.

சம்பளமற்ற லீவினை அனுமதிப்பதற்கு முன்பு திணைக்களத் தலைவர் திருப்தியான ஒழுங்குகள் செய்து முற்பணக் கணக்கு கடன், மாதாந்த தவணைப்பணம் என்பவற்றைக் கழிப்பதற்கேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 18.4 கருச்சிதைவிற்காக விடுமுறை

இவ்விடுமுறை அவசியமாயின் வைத்தியச் சான்றிதழின் பேரில் விடுமுறைக்கு உரித்தான ஓய்வில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

அங்கீகரிக்கப்பட்ட 84 நாட்கள் பிரசவகால லீவு முடிவடைந்தபின் 84 நாட்கள் அரைச்சம்பள லீவு எடுக்காத பட்சத்தில் தனது குழந்தைக்கு தாய்ப்பால் ஊட்டுவதற்கு வழமையாக சேவை நிலையத்தில் இருந்து புறப்படும் நேரத்திற்கு 1 மணித்தியாலத்திற்கு முன் சேவை நிலையத்தில் இருந்து புறப்பட அனுமதி வழங்கப்பட வேண்டும். இந்த அனுமதி வழங்கும் காலம் குழந்தையின் 6 மாதகாலம் பூர்த்தியாகும் வரை மட்டும் ஆகும். மேலும் பெண் அரச அலுவலர் ஒருவர் கர்ப்பமுற்று 5 மாதகாலம் ஆகும் போது கடமை நேரத்துக்கு 1/2 மணித்தியாலம் தாமதமாக வருகை தரவும் வழமையாக சேவை நிலையத்தில் இருந்து புறப்படும் நேரத்திற்கு 1/2 மணித்தியாலம் முன்னதாக புறப்படவும் இடமளிக்கப்படுகிறது. இந்தச் சலுகை இடமளிக்கப்படுவது அலுவலர் பிரசவ லீவு பெறப்படும் வரை ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விளக்கு

கல்வியியலாளர்களே!

எழுத்தாளர்களே!

விளக்கு சஞ்சிகை
உங்களின் உயர்வான ஆக்கங்களை எதிர்பார்க்கின்றது.
எழுதுங்கள்.

எமக்கு அனுப்பி வையுங்கள்

வாசகர்களே!

உங்கள் கருத்துக்களையும்
விமர்சனங்களையும் வரவேற்கின்றோம்.
எமக்கு எழுதுங்கள்.

தொடர்புகொள்ளும் முகவரி:
ஆசிரியர்
**"விளக்கு"**
ஆசிரியர் வாண்மை விருத்திக்குழு,
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை,
யாழ்.வலயக் கல்விப் பணிமனை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுரபி பதிப்பகம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org